விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 13 சனிக்கிழமை (28.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 222

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## 'இலங்கையில் நான் கொல்லப்படவிருந்தேன்'



## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

2000 ஆண்டில் தான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது தன்னை படுகொலை செய்வதற்காக சில திட்டங்கள் தீட்டப்பட்டிருந்ததாக நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். சிங்கள தீவிரவாதிகளிடமிருந்து இந்த அச்சுறுத்தல் வந்ததாக நாங்கள் எடுத்துக் கொண்டோம் என 12 ஆண்டுகளின் பின் எரிக் சொல்ஹெய்ம் கூறியதாக நோர்வேயின் அப்ரன் போஸ்ரன் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் வழக்கு ஒத்திவைப்பு!

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு எதிரான வழக்கு எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது இராணுவத்திலிருந்து தப்பியோடிய பத்து பேருக்கு வேலை மற்றும் தங்கும் இடம் வழங்கியதாக சரத் பொன்சேகாவிற்கும் அவரது (02ஆம் பக்கம் பார்க்க)

## பாக்.அமைச்சர் இலங்கை வருகை

(கொழும்பு)

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரப்பானி காஹர் மூன்று நாள் உத்தியோகப் பூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர் வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி புதன்கிழமை இலங்கை வரவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் அழைப்பையேற்று இலங்கை வரவுள்ள பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி (02ஆம் பக்கம் பார்க்க)

## பரிந்துரைகளை அமுல்படுத்த வரவு செலவுத்திட்டத்தில் நிதி

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக, .எதிர்வரும் 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டதாக, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க பரிந்துரைகள் அனைத்தையும் உடனடியாக அமுலாக்க முடியாது என்ற போதும், அதன் சில பரிந்துரைப்புக்களை இலகுவாக நடை (02ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய செயற்றிட்டம் குறித்து எதுவும் தெரியாது - சம்பந்தன்



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை செயற்படுத்துவதற்கென வரையப்பட்டுள்ள தேசிய செயற்றிட்டத்தை பற்றி தமக்கு எதுவும் தெரியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது.

கற்றுக்கொண்ட (02ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பற்ற நாடு அமெரிக்கா!

(கொழும்பு)

உலகிலுள்ள நாடுகளில் மிகவும் பாதுகாப்பு அற்ற நாடு அமெரிக்காதான் என அமைச்சர் விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

கொழும்பு, செற்சிறிபாயவில் நடைபெற்ற சர்வதேச கியூப ஒருமைப்பாட்டு தினத்தில் பேசும் போது அமைச்சர் விமல் வீரவன்ச மேற்படி கூறியுள்ளார்.

இந்த (02ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழு அமுலாக்கத்திற்கு முன் கைதிகளின் பிரச்சினையை தீருங்கள்

## மனோ எம்.பி. வேண்டுகோள்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் ஆணைக் குழுவின் சிபாரிசுகளை அமுல் செய் வதற்காக அரசாங்கம் விசேட செயலணியை ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க தலைமையில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸையும் உள்ளடக்கி அமைத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த அரசாங்கத்தால் வழமையாக அமைக்கப்பட்டு காலத்தைக் கடத்தும் இன்னொரு குழு இதுவல்ல என்று உங்களால் நிரூபிக்க முடியுமா என்று இந்த செயலணியை நான் கேட்க விரும்புகிறேன் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், மக்கள் கண்காணிப்புகுழு அமைப்பாளருமான மனோ கணேசன் (20ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கைதிகளைச் சந்திக்க ஆயருக்கு அனுமதி மறுப்பு

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலையில் இருந்து மஹர சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட தமிழ் கைதிகளை நேற்று சந்திக்கச் சென்ற மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு கைதிகளைச் சந்திக்க சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி மறுத்துள்ளார்.

குறித்த சிறைச்சாலையில் 4 கத்தோலிக்க கைதிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன எம்.பி மற்றும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை ஆகியோர் நேற்று பகல் மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வவுனியா சிறைச்சாலையிலிருந்து இடமாற்றப்பட்ட தமிழ்க் கைதிகளை பார்வையிடச் சென்றனர்.

இதன் போது மன்னார் ஆயர் குறித்த கைதிகளைப் பார்க்க அனுமதி வழங்க முடியாது என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்ததை தொடர்ந்து டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மாத்திரம் குறித்த கைதிகளை சென்று சந்தித்தார்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் இந்த நடவடிக்கையானது இலங்கை அரசியலமைப்புக்கு முரணானது என டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன எம்.பி தெரிவித்தார். (எ-11)

# பளையில் விபத்து இருவர் படுகாயம்

(கனகபுரம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி சென்று கொண்டிருந்த பஸ்ஸும் ரிப்பர் வாகனமும் விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 3 மணியளவில் பளை ஆதார வைத்தியசாலையில் இருந்து 100 மீற்றர் தொலைவில் இடம் பெற்றது.

இவ்விபத்தில் மாங்குளத்தைச் சேர்ந்த யசோதரன் (வயது 33), துரைசிங்கம் பத்மாவதி (வயது 53) என்ற இருவரும் படுகாயமடைந்த நிலையில் பளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-259)

# சுயதொழில் நிவாரணக்கடன் ஜனாதிபதி கையளிப்பார்

புனர்வாழ்வு அதிகார சபையினால் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்களுக்கான சுயதொழில் நிவாரணக்கடன் காசோலை வழங்குதல் தொடர்பான நிகழ்வு நாளை மறுதினம் 30ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு செல்லவுள்ள நிவாரணக் கடன் பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் அனைவரையும் 29ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு முன்னதாக பயண ஒழுங்குகளுடன் மாவட்ட செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான போக்குவரத்து தங்குமிட வசதிகள் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# பாதுகாப்...

உலகத்தில் மிகவும் பாதுகாப்பற்ற நாடு என்றால் அது அமெரிக்காதான்.

அமெரிக்கர்கள் பாதுகாப்பற்ற மன நிலை யிலேயே வாழ்ந்து வருகிறார்கள். அதனால் தான் அமெரிக்கப் பொலிஸார் எந்த விதமான குற்றச்செயல்களிலும் ஈடுபடாத கியூப போதகர்கள் ஐவரை கைது செய்து அவர்களுக்கு பயங்கரவாத முத்திரையும் குத்தியிருந்தார்கள் என்று குறிப்பிட்டார். (எ-11)

# பொன்சேகா...

செயலாளருக்கும் எதிராக தொடரப்பட்ட வழக்கே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கு விசாரணைகளின் போது சரத் பொன்சேகா நேற்று நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தார். குறித்த வழக்கு விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம் பெற்று வருகின்றன. (எ-11)

# 'இலங்கையில் நான்...

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலமான 2000ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி மாநிலச் செயலாளர் ரேமண்ட் ஜோன்சனுடன் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை வந்திருந்தார்.

மூன்று நாள் விஜயத்தில் அவரின் மோட்டார் வாகனத் தொடரணி மீது குண்டுத்தாக்குதல் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது.

தன்னைக் கொலை செய்வதற்கான முயற்சிகள் பற்றி தனக்கு தெரியப்படுத்தப்பட்டதை அவர் உறுதி செய்தார். சொல்ஹெய்ம் கொழும்புக்கு வருதற்கு பல நாட்களுக்கு முன்னரே பொலிஸ் புலன் விசாரணை சேவைக்கு அச்சுறுத்தல் பற்றி அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையிலிருந்த தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்பிலிருந்த நோர்வையிலிருந்த சிலர் மூலம் இந்தத்தகவல் கிடைத்ததாகவும் அவர் கூறினார்.

பல்வேறு சமயங்களில் எமக்கு இந்த அச்சுறுத்தல்கள் பற்றி தெரியப்படுத்தப்பட்டது. இலங்கையில் நாம் இருந்தபோது எமக்கு ஆபத்துள்ளது என அறிந்திருந்தோம். எனது பயணத்திட்டங்கள் இரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸ் பாதுகாப்பு பிரிவு மெய்ப்பாதுகாவலர்கள் இன்றி நாங்கள் இலங்கைக்கு ஒரு போதும் சென்றதில்லை. நாங்கள் சென்றிருந்தபோது அங்கு இலங்கை அரசாங்கத்தினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் பாரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் காணப்பட்டன.

ஆனாலும் அங்கு முழுமையான பாதுகாப்பு உத்தரவாதம் இருக்கவில்லை. பல சிங்களத்தலைவர்கள் கடும் பாதுகாப்புக்கு மத்தியிலேயே கொல்லப்பட்டனர் எனவும் அவர் கூறி னார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பாரிய இராணுவ வெற்றிகளை கண்டிருந்த அத்தருணத்தில் கொழும்பில் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. சிங்கள இராணுவத்தை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும் சாத்தியம் பற்றி நாம் உண் மையிலேயே பேச்சு நடத்தினோம் எனவும் அவர் கூறினார்.

இலங்கையிலிருந்து எரிக்சொல் ஹெய்ம் வெளியேறியிருந்த தருணத்தில் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்திற்கு இனந்தெரியாதோரினால் குண்டு வீசப்பட்டது.

அக் குண்டு தூதரகத்தின் கூரை மீதாகச் சென்று அயல் வீட்டுத் தோட்டத்தில் விழுந்து வெடித்துள்ளது. தன்னை இலக்கு வைத்து இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதா என்று தனக்குத் தெரியவில்லை எனவும் எரிக் சொல் ஹெய்ம் கூறினார்.

அது அப்படியிருக்கலாம் அதை என்னால் அறிந்து கொள்வது சாத்தியமில்லை. நோர்வேக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாக நான் உணர்ந்து கொண்டேன் எனவும் அவர் கூறினார்.

தமிழர்களுக்கு சமவுரிமை அவசியமாகும். ஆனால் அது என்னமும் தீர்த்து வைக்கப்படவில்லை. இப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவிடின் எதிர்காலத்தில் மீண்டும் மோதல் வெடிக்கலாம் எனவும் அவர் கூறினார் என அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ-11)

# பரிந்துரைகளை...

முறைப்படுத்த முடியும் எனவே அவற்றை அடுத்த வருடம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்த நடவடிக்கைகளுக்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரை அமுலாக்கம் தொடர்பிலான ஆவணம் விரைவில் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சு கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 2-3 தினங்களில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை பரிந்துரை அமுலாக்கம் தொடர்பான ஆவணம் ஐக்கிய நாடுகள் அமைப்பில் சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணி வெடி அகற்றுதல், முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல் மற்றும் இடம்பெயர் மக்களை மீளக் குடியேற்றல் ஆகிய நடவடிக்கைகள் அநேகமாக பூர்த்தியாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பாரியளவிலான உயர் பாதுகாப்பு வலயங்கள் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# தேசிய செய...

பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துவது தொடர்பாக தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் உள்ளதாக தாம் கருதுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பரிந்துரைகள் பற்றி எனக்குத் தெரியாதுள்ளமையால் நான் அவை பற்றி விமர்சிக்க விரும்பவில்லை என சம்பந்தன் மேலும் கூறினார். (எ-11)

# பாக்.அமைச்...

மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பல அமைச்சர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்[illegible]ள்ளார்.

இதேவேளை, ஓகஸ்ட் மூன்ற[illegible] திகதி வரையில் இலங்கையில் தங்கியிருக்கவுள்ள பாகிஸ்தான் அமைச்சர் ஹினா, சர்வதேச உறவுகள் மற்றும் தந்திரோபாய கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் கற்கை நிலையத்தில் தெற்காசியாவில் இலங்கை-பாகிஸ்தான் உறவு எனும் தலைப்பில் ஓகஸ்ட் 2ஆம் திகதி உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


## வீடு உடன் விற்பனைக்கு

ஆனைக்கோட்டை சங்கரப் பிள்ளை வீதியில் 4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. வீடு காலியான நிலையில். தரகர் தேவையில்லை.

T.P.No.: 0718560372
0212255491

(100)

## வாகனங்கள் விற்பனைக்கு

1. புதிய மூன்று சில்லு ஓட்டோ கார் NPKZ-----
2. HONDA CD 185 84 SRI ----
3. HONDA CD 200 126 ----

தொடர்புகளுக்கு:
0772832755
0770200224

(C-643)

## Spot Admission For EUROPE

ஐரோப்பிய நாட்டு பல்கலைக்கழக/கல்லூரிகளின் உயர்கல்வி ஆலோசகர் தற்போது இலங்கையில், நேர்முகப்பரீட்சைகள் நடத்தி ஆலோசனைகள் வழங்குகிறார்கள்.

2012 August, September அனுமதிக்கான Spot Admission இம்மாதம் 28ம், 29ம் திகதிகளில் யாழ் மண்ணில் உதயன் கேட்போர் கூடத்தில், 30ம் திகதியில் இருந்து அடுத்த மாதம் 5ம் திகதி வரை கொழும்பில்




விசா கிடைத்தபின்பு பாடநெறிக்கான கட்டணம் ரு 150 000 மட்டுமே... வருடத்திற்கு US $2900

- பட்டப்படிப்புடன் பகுதிநேர வேலைவாய்ப்பு
- IELTS அவசியமில்லை
- ஆகக்குறைந்த கல்வித்தகைமை O/L
- Sponsorship தேவையில்லை
- கற்கைநெறியின் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தும் வசதி
- விடுமுறைநாட்களில் விரும்பிய ஐரோப்பிய நாடுகளில் பகுதிநேர வேலைவாய்ப்புகள்
- குறைந்த வாழ்க்கைச் செலவு
- குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து கொள்ளும் வசதி

- MBBS
- Engineering
- Aircraft Flight Operation (Pilot)
- Management
- Hotel & Tourism
- Computing
- Automation
- Marketing
- Banking
- Nursing • Law
- HR • Design

1000's of courses...

STUDY/ VISIT/ BUSINESS
• Sweden • New Zealand • Italy
• German • Singapore • UK
• France • Ukraine • Cyprus

072 62 69 956
077 354 64 00
87, பேராதெனிய வீதி, கண்டி.

Rohaka (Pvt) Limited
வெளிநாட்டுப் பட்டப்படிப்பிற்கான ஆலோசகர்கள்
91, 5 வது மாடி, காலி வீதி, பம்பலப்பிட்டிய, கொழும்பு 04.
(மயஸ்ரிக் சிட்டி அருகில், சிங்கர் கட்டிடத்தொகுதியில்)
தொலைபேசி: 0112 590 445 www.rohaka-global.com

## தையல் நிலையமும் தையல் மெசின் திருத்தகமும்

பெண்களுக்கான, சிறுவர்களுக்கான உடுப்புக்கள் புதிய டிசைன்களில் நவீன முறையில் குறைந்த செலவில் தைத்துக் கொடுக்கப்படும்.

தையல் மெசின்கள் திருத்திக் கொடுப்பதுடன் வாங்கியும் விற்றுக் கொடுக்கப்படும்.

இடம்:- வலி காமன்ஸ் தையல் நிலையம்
சந்தை கிழக்கு பக்க வீதி
(மாதாசிலை முன்பாக)
சங்கானை.

(C-640)

WESTERN UNION MONEY TRANSFER
## நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு அளப்பரிய பரிசில்கள்
MMBL Money Master

உலகில் எப்பாகத்திலிருந்தும் வெஸ்டர்ன் யூனியன் மூலம் அனுப்பிய பணத்தினை ஒருசில நிமிடங்களில் உங்கள் கைகளில் கிடைக்கவும் உலகின் எப்பாகத்திற்கும் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள், எதுவானாலும் ஒருசில தினங்களில் கிடைக்கவும்



நம்பிக்கை ! நாணயம் ! உத்தரவாதம்
கடந்த இரண்டு தசாப்தங்களாக ஒரே இடத்தில் சேவை வழங்கும் ஒரே ஸ்தாபனம்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையம்



303, கே.கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.



T.P.No.: 021 222 5392, 2670
Fax - 021 222 3214

குறிப்பு:
கே.கே.எஸ். [illegible] அதே இடத்தில் [illegible] மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-637)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


## மாபெரும் சிரமதானப் பணி

இடம் : மண்டைதீவு தில்லை ஈஸ்வரம் சிவன் ஆலயம்
காலம் : 29.07.2012 நாளை ஞாயிறு காலை 7.30 மணி

சிரமதானப் பணியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பரிபாலன சபை
தில்லை ஈஸ்வரம் சிவன் ஆலயம்
மண்டைதீவு.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியரும் பகுதித்தலைவருமான **திருமதி விமலா சுகுமார்** அவர்களின் அன்புக் கணவர்

## நவரட்ணம் சுகுமார்

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா.அ.ச, ப.மா.ச,
யா/ திருநெல்வேலி இ.த.க.பாடசாலை

# இன்று ஒரு தகவல்

## குரு கேட்ட தட்சனை

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அவருக்கு ஒரு கவலை. என்ன கவலை? அவருக்கு இருக்கிற ஒரே பிள்ளை சரியாகப் படிக்காமல் ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறான் என்ற கவலை அவரை வாட்டியது.

ராஜா கவலையாக இருக்கிறதைப் பார்த்து மந்திரி அருகிலே வந்தார்.

''அரசே நமது இளவரசரை பக்கத்திலே உள்ள காட்டுக்கு அனுப்பி... அங்கேயிருக்கிற முனிவரிடம் சிறிது நாட்களுக்கு பாடம் படித்து விட்டு வருவதற்கு ஏற்பாடு செய்தால்... அவர் புத்திசாலியாக மாறிவிடுவார் என்று நினைக்கிறேன்'' என்றார்.

ராஜாவுக்கும் இந்த யோசனை சரி என்று தென்பட்டது.

உடனே இளவரசனை அழைத்துக்கொண்டு அந்த முனிவர் இருக்கிற ஆசிரமத்திற்கு போனார்.

அங்கே ஒரு மரத்தடியிலே அமர்ந்திருந்து, முனிவர் தன்னுடைய சீடர்களுக்கு பாடம் புகட்டிக் கொண்டிருந்தார். பாடம் சொல்லிக் கொடுப்பதில் கவனமாக இருந்தாரே தவிர அருகில் நின்று கொண்டிருந்த ராஜாவை அவர் கவனிக்கவில்லை.

இது ராஜாவுக்கு மிகவும் அவமானமாகப் போய்விட்டது. ஆத்திரம் தலைக்கு ஏறிவிட்டது.

உடல் முழுவதும் துடித்தது. இருந்தாலும் மகனை அவரிடம் சேர்க்க வேண்டும் என்பதற்காக பொறுமையைக் கடைப்பிடித்தார். கோபத்தை வெளியில் காட்டவில்லை.

சிறிதுநேரம் சென்ற பின்னர் முனிவர் நிமிர்ந்து பார்த்தார்.

ராஜா விடயத்தைத் தெரியப்படுத்தினார். சரியென்று கூறிவிட்டு இளவரசனைத் தன்னுடைய சீடனாகச் சேர்த்துக் கொண்டார் அந்த முனிவர்.

முனிவர் அவனுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். பல வருடங்கள் சென்றன.

இளவரசன் படிக்க வேண்டியதெல்லாம் கற்றுக்கொண்டான். அரண்மனைக்கு திரும்பும் காலம் நெருங்கியது. நேராகக் "குரு" விடம் போனான். ''குரு தட்சணை''யை அவர் பாதத்திலே வைத்தான். வணங்கினான். குரு நிமிர்ந்து பார்த்தார்.

இப்போது குரு தட்சணை எதுவும் எனக்குத் தேவை இல்லை... இதை எடுத்துக்கொள்... நான் கேட்கும்போது கேட்பதைக் கொடுத்தால் போதும் என்று கூறினார். குரு பேச்சிற்கு மறுபேச்சு பேசலாமா? இளவரசன் பேசாமல் திரும்பி வந்து விட்டான்.

இளவரசன் புத்திசாலியாகத் திரும்பி வந்ததிலே அந்த ராஜாவுக்கு மிகவும் சந்தோஷம். இருந்தாலும் அந்த முனிவர் ஆரம்பத்திலே தன்னை அலட்சியப்படுத்தினார் என்பதை ராஜா மறக்கவில்லை... அந்தக் கோபத்தை இப்போது காட்டினார்.

படைவீரர்களைக் காட்டுக்கு அனுப்பி அந்த ஆசிரமத்தை சூறையாடச் சொன்னார். அவ்வளவுதான். இவர்கள் போய் அடித்து நொறுக்கிவிட்டு வந்து விட்டார்கள். இது இளவரசனுக்குத் தெரியாது.

நாட்கள் கழிந்தன. இளவரசன் தன்னுடைய குருவை பார்ப்பதற்காகக் காட்டுக்குப் போனான். அங்கே போய் பார்த்தால் குருவையும் காணவில்லை... ஆசிரமத்தையும் காணவில்லை... காடு பூராகவும் அலைந்து திரிந்தான்.

கடைசியாக ஒரு ஆற்றங்கரையிலே அந்தக் குருவின் ஆசிரமம் தெரிந்தது. ஓடிப்போய் குருவை வணங்கினான். அவர் பாதத்திலே "குரு தட்சணை"யை வைத்தான்.

இப்போதும் முனிவர் அதைத் தொடவில்லை... தேவைப்படும் போது வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்.

சரியென்று கூறிவிட்டு இளவரசன் புறப்பட்டான்.

அப்போது ஆசிரமத்துக்கு வெளியிலே சில சீடர்கள் இவரைச் சுட்டிக்காட்டி ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். சற்று உற்று கவனித்துக் கேட்டான்.

தன்னுடைய குருவின் ஆசிரமத்தை அழித்தது தனது தந்தை தான்– என்பதை விபரமாகப் புரிந்து கொண்டான். அவனுக்கு கோபம் வந்தது.

"இப்போதே போய் என் தந்தையின் தலையை வெட்டிக் கொண்டு வந்து என் குருவின் பாதத்திலே வைக்கிறேன் பார்'' என்று கத்தினான்.

கோப வெறியோடு வாளை உருவிக் கொண்டு புறப்பட்டான். இதை அறிந்த சீடர்கள் ஓடிப்போய் குருவிடம் விடயத்தைத் தெரிவித்தனர்.

"ஓடிப்போய் இளவரசனைத் தடுத்து, இங்கே அழைத்து வாருங்கள்" என்றார் குரு. அழைத்துக் கொண்டு வந்தார்கள். இளவரசன் கோபத்துடன் வந்தான். முனிவர் அவனைப் பார்த்தார்.

"இப்போது எனக்கு குருதட்சணை வேண்டும்" என்றார். "என்ன வேண்டும்?'' எனக் கேட்டான் இளவரசன்.

"கோபம்'' என்றார் குரு.

"உன்னிடம் இப்போதுள்ள கோபத்தை எனக்கு குருதட்சணையாகக் கொடு'' என்றார்.

இளவரசன் தலையைக் குனிந்து கொண்டு அவர் முன்னால் நின்றான். அதன்பின் திரும்பி அரண்மனைக்குப் போனான். இங்கே நடந்தது எல்லாம் அங்கே ராஜாவுக்குத் தெரிந்து விட்டது. ஓடி வந்து முனிவர் காலிலே விழுந்து மன்னிப்பு கேட்டார்.

நம்மிடம் உதவி பெற்று பயனடைந்தவர்களே நமக்குத் கெடுதல் செய்ய நினைப்பதுண்டு. அவர்களை நம்முடைய பண்பினால் வெற்றி கொள்ள முடியும் என்பதை இந்தக் கதை எடுத்தியம்புகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஜனாதிபதி நீதித்துறையை இப்படியா பாதுகாப்பது?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

(இரத்தினபுரி)

மன்னார் நீதிவானை அச்சுறுத்திய சம்பவத்துடன் தனது அமைச்சரொருவருக்குத் தொடர்பிருக்கின்றது என சந்தேகப்படுவதையிட்டுத் தான் கவலையடைவதாக ஜனாதிபதி மஹிந்த கூறியுள்ளார்.

இந்நிலையில் நாட்டின் ஜனாதிபதியொருவர் நீதித்துறையை இப்படியா பாதுகாப்பது? என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இரத்தினபுரியில் இடம்பெற்ற கட்சிக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவிக்கையில்,

நீதியைப் பாதுகாத்தால் எமது பதவி பறிபோய்விடும். பதவியைப் பாதுகாக்கப் போனால் நீதிக்கு என்ன நடக்கும்? அது இன்று நீதிமன்றம் வரையில் வியாபித்துள்ளது. நீதிமன்றத்துக்கே அழுத்தம் கொடுக்கும் நிலைமை நாட்டில் உருவாகியுள்ளது.

மன்னாரில் நடந்த சம்பவம் என்ன?

மன்னார் நீதிவான் வழங்கிய தீர்ப்பொன்றை மாற்றியமைக்குமாறு வலியுறுத்தி நீதிவானுக்கு அழுத்தம் கொடுத்ததாக அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அமைச்சரொருவருக்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

நீதிவான் மேற்படி அழுத்தத்துக்கு அடி பணியாததால் நீதிமன்றம் சுற்றி வளைக்கப்பட்டது. அதன் பின்னர் நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் குறித்த நீதிவானை இடமாற்றுமாறு கோரி வேண்டுகோள் விடுக்கப்பட்டது எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

தனது அமைச்சரொருவருக்கு மன்னார் நீதிமன்றச்சம்பவத்துடன்தொடர்பிருக்கின்றது எனச் சந்தேகிக்கப்படுவது குறித்து தான் கவலையடைவதாக ஜனாதிபதி கூறுகின்றார். இதில் சந்தேகப்படுவதற்கு ஒன்றுமில்லை. குறித்த அமைச்சர் மேற்படி சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என்பதற்கான சாட்சிகளும் உள்ளன என்றார். (அ-2)

# கிராம அலுவலகரை சந்திக்க முடியாது அல்லற்படும் மக்கள்

(றெட்பானா)

கிராம சேவகர் அலுவலகங்களில் கிராம சேவகர்களை சந்திக்க முடியாத மக்கள் பல அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர். புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் எல்லைகளுக்கு உட்பட்ட சில கிராமசேவகர் பிரிவுகளில் கிராம சேவகர்களை கடமை நேரங்களில் அல்லது கிழமை நாட்களில் சந்திக்க முடிவதில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் பல தேவைகளை பூர்த்தி செய்ய கிராம சேவையாளர்களை சந்திக்க செல்கின்ற மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் ஏமாற்றத்துடன் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக விசுவமடு புத்தடி கிழக்கு பகுதி மக்கள் இப்பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. எனவே, பிரதேச செயலர் இவ் விடயத்தை கவனத்தில் கொண்டு மக்கள் பயன்பெறும் வகையில் இப்பிரச்சினையைத் தீர்த்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-3-260)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50-70 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 75 | 80-120 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 60 | 60 |
| தக்காளி | 130 | 100 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 50 | 60 | 50 | 80 |
| கரட் | 85 | 120 | 100 | 140 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 |
| புடோல் | 40 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 80 | 65 |
| பெரிய வெங்காயம் | 75 | 70 | 90 | 70 |
| பாகற்காய் | 80 | 100 | 70 | 70 |
| வெண்டிக்காய் | 90 | 60 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 140 | -- | -- |
| பயற்றங்காய் | 120 | 110 | 100 | 60 |
| லீக்ஸ் | 130 | 120 | 110 | 140 |
| பீற்றூட் | 50 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 90-100 | 90 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 60 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 120 | 110 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | -- | 50 | -- |
| கீரை - 1 பிடி | 08 | 10-20 | 20 | 15 |
| தேசிக்காய் | 80 | 50 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 25 | 18-20 |

# இராசி பலன்

*28.07.2012*
*(ஆடி 13, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*தசமி முன்னிரவு 7.26 மணிவரை*
*அனுஷம் பின்னிரவு 4.07 மணிவரை*
*இராகுகாலம் 9.03-10.33 மணிவரை*
*சுபநேரம் 3.03-4.33 மணிவரை*

**மேடம்** குழப்பங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, செலவுகள் அதிகமாகும், எதிலும் குறை கேட்கும் சூழ்நிலை உருவாகும்.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**மிதுனம்** கூட்டுத்தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல் அகலும், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** விருந்தினர் வருகையுண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், கல்வி முன்னேற்றம் கருதி ஒரு தொகையை செலவு செய்யும் நிலை உருவாகும்.

**சிங்கம்** வாகன சுகமுண்டு, தாய் வழி உறவில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், தொழில் விருத்திக்கு அதிக பிரயாசை எடுப்பீர்கள், சேமிப்பு பழக்கம் அதிகரிக்கும்.

**கன்னி** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், சுவாரஸ்யமான நாள்.

**துலாம்** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரும், தன வரவுகள் திருப்திகரமாக அமையும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.

**விருச்சிகம்** விரும்பிய காரியங்கள் விரும்பிய படியே கைகூடும், மனதில் இனம் புரியாத சிந்தனைகள் தோன்றும், பயணத்தால் பலனுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு** ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன ஏற்படலாம், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் உருவாகலாம், நண்பர்கள் வழியில் சிறு விரயங்கள் ஏற்படலாம்.

**மகரம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திட்டமிட்ட காரியங்கள் கைகூடும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்** தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், சுப செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம்.

**மீனம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்றிறன் அரங்க இயக்கத்தினால் ஆறு மாத கற்கைநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வரும் செயற்றிறன் அரங்க இயக்கம் (ACTIVE THEATRE MOVEMENT ) நடிப்பு நாடகத் தயாரிப்பு குறும்படத் தயாரிப்பு தொடர்பான ஆறுமாதப் பயிற்சி நெறியொன்றினை இன்று சனிக்கிழமை ஆரம்பிக்கவுள்ளது.

மேற்படி பயிற்சிப் பட்டறையானது சனி மற்றும் ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இத்துறையில் அனுபவம் வாய்ந்த கலைஞர்களினால் கற்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் ஏற்கனவே நாடகத்துறையில் அனுபவம் பெற்றவர்கள் குறும் படத் திரைப்படத்துறையில் பயிற்சி பெற விரும்பின் பயிற்சியில் பங்கேற்று பயனடையலாம்.

அத்துடன் புதிதாக நடிப்புத் துறையிலும் நாடகத் தயாரிப்புத் துறையிலும் குறும்படத் தயாரிப்புத் துறையிலும் பயிற்சி பெற விரும்புவர்களும் பங்கேற்று பயன் பெற முடியும்.

மேலதிக தகவலை 021 321 6222 அல்லது 0773112692 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (அ-2)

# டைனமெற் வைத்து மீன்பிடி; மண்டைதீவில் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

டைனமெற் வெடிகுண்டைப் பயன்படுத்தி மீன் பிடித்த ஐவரை மண்டைதீவு கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அவர்களிடம் ஆயிரம் கிலோகிராம் பாரை மீன்கள் மீட்கப்பட்டுள்ளன.

குருநகரைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் மண்டைதீவு கடற்பரப்பில் ரோலர் படகு மூலம் டைனமெற்றைப் பயன்படுத்தி மீன் பிடித்துக் கொண்டிருந்துள்ளனர்.

டைனமெற் வெடிச்சத்தம் கேட்கவே கடற்படையினர் குறித்த இடத்திற்கு விரைந்து சென்று டைனமெற்றினால் பிடிக்கப்பட்ட மீன்களையும் அவர்களுடைய படகையும் கைப்பற்றியதுடன் ஐவரையும் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்களிடம் கைப்பற்றப்பட்டுள்ள ஆயிரம் கிலோ கிராம் நிறையுடைய பாரை மீன்களின் பெறுமதி பல இலட்சம் ரூபா உடையது என்றும் இவை தொடர்பில் மருத்துவ பரிசோதனையின் பின்னர் நீதிமன்றின் உத்தரவிற்கமைய மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (அ-4-8)

# விசேட கல்வி நூற்றாண்டு விழாவில் பங்குகொள்ளவுள்ள மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் விசேட கல்வி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் சாதாரண மாணவர்களுக்கும் கட்டுரைப்போட்டிகள் வலய, மாகாண, தேசிய மட்டங்களில் நடத்தப்பட்டது.

இதில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தினைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்ற மாணவர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை லும்பினி விதூகலு கொழும்பு-5 எனும் முகவரியில் இடம்பெறவுள்ள விசேட கல்வி நூற்றாண்டு விழாவில் பங்கு பற்றுவதற்கு விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் ஊடாக மாணவர்கள் தொடர்பு கொண்டு போக்குவரத்தில் இணைவதற்கேற்ற நடவடிக்கையை முன்னெடுக்குமாறு வட மாகாண பதில் மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் கேட்டுள்ளார். தேசிய மட்டத்தில் முதலாமிடத்தை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

கட்டுரைப்போட்டி

*ஆரம்பப் பிரிவு(தரம்1-5)*

வை. பவானிகா (கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்)

*கனிஷ்ட பிரிவு (தரம்6-9)*

வை. எமரென்சியா ( யா/ இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்)

*சிரேஷ்ட பிரிவு (தரம் 10-13)*

பி. கஜலக்ஷி ( யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) (அ-2)

# சாவ.நகர சபை வீதிகளில் வீதி விளக்குகள் ஒளிரவில்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பல வீதிகளில் சில மின் குமிழ்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்குறித்த நகர சபைக்குட்பட்ட வீதிகளில் மின் குமிழ்கள் ஒளிராமையால் இரவு வேளையில் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

அத்துடன் இவ்வீதியானது இருள் சூழ்ந்த நிலையை சாதகமாக பயன்படுத்தி சட்ட விரோதமான செயற்பாடுகள் மற்றும் அங்க சேஷ்டைகள் என்பனவும் இடம்பெற வாய்ப்புகள் காணப்படுகின்றன.

எனவே, மேற்குறித்த வீதிகளில் மின் குமிழ்களைப் பொருத்துவதன் ஊடாக இவ்வாறான அசம்பாவித செயற்பாடுகளை நிறுத்த முடியும்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு விரைந்து நடவடிக்கை எடுத்து வீதிகளில் மின்விளக்குகளைப் பொருத்தி போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)




# சமுர்த்தி அலுவலகம் பொ.நோ. மண்டபத்தில்

மண்டுவில், பொது நோக்கு மண்டபத்தில் அப்பகுதி சமுர்த்தி காரியாலயம் நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளது. எனவே அப்பகுதி சமுர்த்தி பயனாளிகள் செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தமது தேவைகளை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# பண்ணிசைப் பரீட்சை

அகில இலங்கை திருமுறை மன்றம் நடத்தும் தேவாரப் பண்ணிசைப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய நூலக மேல்மாடி மண்டபத்தில் நடைபெறும்.

இதேவேளை முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டு பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் அன்றைய தினம் சைவ ஆசார சீலர்களாக பரீட்சை மண்டபத்திற்கு வருகை தருமாறு மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி கேட்டுள்ளார். (அ-2)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், யாழ்.பிரதான வீதியில் நீதிமன்றம் தொடக்கம் கச்சேரி வரையான பிரதேசம், மருதனார்மடத்தின் ஒரு பகுதி, இணுவில், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், குளப்பிட்டி, கொக்குவில்,நாச்சிமார் கோவிலடி, தட்டாதெருப் பிரதேசம், கோம்பயன் மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, பாசையூர், கொழும்புத்துறை, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சங்கானை, குஞ்சர் கடை ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, உரும்பிராய், யாழ். நகரம் முழுவதும், இயக்கச்சி, பளை, மாசார், புதுக்காடு, மருதங்கேணி, உசன், மிருசுவில், மந்துவில், மீசாலை, வடக்கு மிருசுவில், நாவற்காடு ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# ‘கள்’ விற்றவருக்கு நீதிமன்றில் வேலை!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத கள் விற்பனையில் ஈடுபட்ட இருவரை யாழ்.நீதிமன்றம் ஒரு வார காலத்திற்கு சுத்திகரிப்பாளர் பணிக்கு அமர்த்தியுள்ளது.

கோப்பாயிலும் கொக்குவிலிலும் அனுமதிப்பத்திரம் இன்றி கள் விற்பனையில் ஈடுபட்டு வந்த இருவருக்கு எதிராக யாழ். மதுவரித்திணைக்களம் யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடுத்திருந்தது.

குறித்த வழக்கு யாழ். நீதிவான் மா. கணேசராசா முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதவான் குறித்த இருவரையும் 10 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுத்ததோடு யாழ். நீதிமன்றில் ஒரு வாரகாலம் சுத்திகரிப்பு பணியில் ஈடுபடுமாறும் உத்தரவிட்டார். (ந-4)

# ஸ்ரீ அம்மா பகவான் பாதபூசை நிகழ்வு

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை ஸ்ரீ அம்மா பகவான் பாதபூசை நிகழ்வு இடம்பெறும்.

எனவே, பக்தர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு ஆசீர் பெறுமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுள்ளனர். (அ-2)





யா/ திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியின் வகுப்பறைக் கட்டடத்தொகுதியின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா நாடா வெட்டி திறந்து வைப்பதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்பாதுகாப்பு வலயத்தை விலக்கி கேப்பாபிலவு மக்களை குடியமர்த்துங்கள்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கோரிக்கை

(வவுனியா)

**தகரக்கொட்டிலில் வெந்து வாடுவோருக்கு உடனடி நிவாரணமாக அவர்களைச் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற வேண்டும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கேப்பாபிலவு கிராம அலுவலர் பிரிவின் கீழ்வரும் கேப்பாபிலவு, பிலக் குடியிருப்பு, சூரிபுரம், சீனியா மோட்டை ஆகிய பகுதிகளில் 111 குடும்பங்களைச் சேர்ந்தோர் வசித்து வந்துள்ளனர். இப்பிரிவில் வசித்த 412 குடும்பங்கள் கடந்த 2009 ஆம் ஆண்டின் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து வசிக்கின்றனர்.

இவர்களில் மீளக் குடியேறாத 340 குடும்பங்கள் தற்போதும் மெனிக்பாம் முகாம்களில் உள்ள தகரக் கொட்டிலின் கீழ் வெப்பநிலை நிலவுகின்ற காலநிலையில் தினமும் வெப்பத்தில் வெந்து துன்பப்படுகின்றனர். பிள்ளைகளின் கல்வி நிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. முகாம் பாடசாலையில் முறையான ஆசிரியரின்றி, இருக்கை வசதியின்றி மாணவர்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர். மெனிக்பாமிலிருந்த சீனியா மோட்டையைச் சேர்ந்த குடும்பங்களுள் 72 குடும்பங்கள் தற்போது வற்றாப்பளையில் குடியேறியுள்ளனர்.

கேப்பாபிலவில் வசித்த 412 குடும்பங்களில் சீனியா மோட்டையைச் சேர்ந்த 72 குடும்பங்கள் மட்டுமே பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் மீள்குடியேறியுள்ளனர். பிலக்குடியிருப்பில் வசித்த 69 குடும்பங்களுக்கான தலா அரை ஏக்கர் வீதம் 35 ஏக்கருக்கு மேற்பட்ட வீட்டுக்காணி, பெருமளவான வயற்காணி மற்றும் பொது மைதானம் அடங்கலான பாரிய பிரதேசம் பாதுகாப்புப் படையினரால் உயர்பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டு கம்பி வேலி அமைத்து விமானப் படைக்குச் சொந்தமானது எனப் பெயர்ப்பலகை இடப்பட்டுள்ளது.

கேப்பாபிலவில் வசித்தவர்களுள் சொர்ணபூமி உறுதிக்காணி உள்ளவர்களும் அடங்குவர். இதுவரை மீள்குடியேறாத குடும்பங்களை நந்திக் கடல் அருகே காணி ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு பரப்பு நிலமும் வீடும் வழங்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாகத் தெரிகிறது. பலாலி, மாதகல், திருவடி நிலை உள்ளிட்ட வடக்கு, கிழக்கில் உள்ள மக்களின் பூர்வீக நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டு நிரந்தர இராணுவ மையங்களை நிர்மாணித்தது போல் கேப்பாபிலவையும் கையகப்படுத்தி அந்நிலைத்தின் சொந்தக்காரர்களை விரட்டியடித்து விட்டு நிரந்தர இராணுவ மையங்களை அமைக்கும் அரசின் திட்டமிட்ட செயற்பாட்டை உடன் நிறுத்தி கேப்பாபிலவு மக்களை அவர்களுக்குரித்தான சொந்த நிலங்களில் வாழ வழியேற்படுத்த முப்படைக்கும் பொறுப்பு வாய்ந்த இந்நாட்டின் ஜனாதிபதி அவர்கள் நேரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். (அ-2)

# நாட்டின் நீர்மின் உற்பத்தி இருபது வீதத்தால் குறைவு

## இலங்கை மின்சாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

நிலவும் வரட்சி காரணமாக தற்போது நீர்மின் உற்பத்தி 20 வீதம் வரை குறைவடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை நீர்மின் உற்பத்தி நடவடிக்கைகளை உரிய முகாமைத்துவத்துடன் மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்ரம கூறியுள்ளார்.

மின்சாரக் கட்டமைப்பை நிலையாகப் பேணுவதற்கு நீர்மின் உற்பத்தியின் பங்களிப்பு மிகவும் அவசியம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செயலிழந்த கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை இன்றைய தினத்தில் தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைக்க முடியும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

# நாட்டின் அராஜக போக்கிற்கு 18 ஆம் திருத்தச் சட்டமே காரணம்

(கொழும்பு)

நாட்டில் அராஜக நிலைமை ஏற்பட்டுள்ளதாக எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் அமைப்பின் 17 ஆம் திருத்தச் சட்ட மூலம் அமுல்படுத்தப்பட்ட காலத்தில் நாட்டில் சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்பட்டது. எனினும் 18 ஆம் திருத்தச் சட்ட மூலம் அமுல்படுத்தப்பட்டதனை தொடர்ந்து நாட்டில் அராஜக நிலைமை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பொலிஸ் பொதுத்துறை சேவை உள்ளிட்ட நாட்டின் ஏனைய துறைகள் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. சுயாதீன ஆணைக்குழுக்கள் இரத்து செய்யப்பட்டதனை தொடர்ந்து பொதுத்துறையை சேர்ந்த அதிகாரிகள் நாட்டுக்காக வன்றி அர சியல்வாதிகளுக்காக கடமையாற்ற நேரிட்டுள்ளது. ஆளும் கட்சி அரசியல்வாதிகள் நீதிமன் றத்தை அவமதித்தாலும் ஊழல் மோசடிக ளில் ஈடுபட்டாலும் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்றார். (அ-2)

# அரசாங்கத்தின் கவனயீனத்தால் உயர்தர மாணவர்கள் பாதிப்பு

அரசாங்கத்தின் கவனயீனத்தால் உயர்தர மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் கவனயீனம், பொறுப்புணர்ச்சியற்ற தன்மையே இந்த நிலைமைக்கு காரணமாகும்.

முன்னர் வெளியிடப்பட்ட இசட் புள்ளி பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான பல மாணவ, மாணவியர் புதிய பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படவில்லை. பல்கலைக்கழகம் செல்லவும் முடிய வில்லை. பரீட்சைக்கு தோற்றவும் முடியவில்லை. அதி உயர் சித்திகளை பெற்ற மாணவர் களினாலேயே பல்கலைக்கழக அனுமதியை உறுதிப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட் டுள்ளது. இந்த அநீதி நிலைமைக்கு எதிராக நாட்டின் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து போராட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)


## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

பிறப்பு:- 1978 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-உத்தரம் 2
கி.பா:-34, 7 இல் செவ்
தொழில்:- வங்கி ஊழியர்
B/169

பிறப்பு:- 1980 இந்து
நட்சத்திரம்:-ரோகினி 4
உயரம்: 5'5"
கி.பா:-106, 7 இல் செவ்
தொழில்:-உதவிப் பொறியியலாளர்
B/119

பிறப்பு:- 1980 கிறிஸ்தவம்
நட்சத்திரம்:-மிருகசீரிடம் 3
உயரம்: 5'3"
கி.பா:-48
தொழில்:- அரச திட்டப் பணிப்பாளர்
B/139

பிறப்பு:- 1980 இந்து
நட்சத்திரம்:-பரணி 2
உயரம்: 5'3"
கி.பா:-18
தொழில்:-வியாபாரம் (சொந்தமாக)
B/093

பிறப்பு:- 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-அவிட்டம் 3
உயரம்:- 4'10"
கி.பா:-50, 7 இல் செவ்
தொழில்:-ஆங்கில ஆசிரியை
G/122

பிறப்பு:- 1977 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-கார்த்திகை 4
உயரம்:- 4'10"
கி.பா:-40.25, 1 இல் செவ்
தொழில்:-நூலகர் விஞ்ஞானம்
G/123

பிறப்பு:- 1987 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-பரணி 1
உயரம்: 5'2"
கி.பா:-43.25, 1 இல் செவ்,சூரி
தொழில்:-ஆங்கில ஆசிரியை
G/120

பிறப்பு:- 1964 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-பூரம் 4
கி.பா:-77.75
தொழில்:- ஆசிரியை
G/109

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி கோரல்கள்

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**

**துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

**யாழ்ப்பாணம்**

## யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாலங்கள், புனர்நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்

## பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

1. பின்வரும் புனர்நிர்மாண வேலைகளிற்கான மூடிய கேள்வி கோரல்கள் பிரதம பொறியியலாளர், கேள்விச் சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக்கொள்வார்.

| வேலை விபரம் | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் ICTAD |
|---|---|---|
| 1. 9/2 இலக்க பாலம் மீள் மேல் தளமிடல்– சாவகச்சேரி– புலோலி வீதி | 20,000 | C7 |
| 2. 5/7 இலக்க பாலம் மீள் மேல் தளமிடல்– புலோலி– கொடிகாமம்– கச்சாய் வீதி | 20,000 | C7 |
| 3. 13/1 இலக்க பாலம் மீள் மேல் தளமிடல்– சாவகச்சேரி– புலோலி வீதி | 20,000 | C7 |
| 4. 5/3 இலக்க பாலம் மீள் மேல் தளமிடல்– புலோலி– கொடிகாமம்– கச்சாய் வீதி | 20,000 | C7 |
| 5. 24/1 இலக்க மதகு மீள் நிர்மாணம் யாழ்ப்பாணம்–மானிப்பாய்– காரைநகர் வீதி | 14,000 | C7 |
| 6. 23/4 இலக்க மதகு மீள் நிர்மாணம் யாழ்ப்பாணம்–மானிப்பாய்– காரைநகர் வீதி | 13,000 | C7 |
| 7. 27/2 இலக்க மதகு மீள் நிர்மாணம் யாழ்ப்பாணம்–பொன்னாலை–பருத்தித்துறை வீதி | 20,000 | C7 |

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 13.08.2012 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும். கேள்விப் பத்திரங்கள் 13.08.2012 அன்று காலை 10.00 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப் பத்திர ஆவணங்கள் 02.08.2012 தொடக்கம் 10.08.2012 பிற்பகல் 2 மணிவரை மீள் அளிக்க முடியாத வைப்புத் தொகையான 750/– + பெறுமதி சேர் வரி 12% செலுத்திப் பெற வேண்டும்.

2. தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

அ. கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற்குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.

3. கேள்வி கோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

4. முன் கேள்வி கோரல் கூட்டம் 10.08.2012 அன்று காலை 10 மணிக்கு பிரதம பொறியியலாளர் , வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

5. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.

6. மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப் பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாது காப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப் பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

7. மூடி ஒட்டப்பட்ட கேள்விப் பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு (13.08.2012 மு.ப. 10.00) முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. கிடைக்கப்பெற்ற கேள்விப் பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும். கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப் பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. மேலதிக விபரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம். | 021 222 2968 |

மாகாணப் பணிப்பாளர் (வ)
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர்
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி–635)

# அரசாங்கம் தேர்தலில் வெற்றிபெற பலமான எதிர்க்கட்சியே தேவை

## அமைச்சர் நிமால் கிண்டல்

(கொழும்பு)

எதிர்க்கட்சியின் பலவீனத்தின் ஊடாக தேர்தலில் வெற்றியீட்டும் தேவை எமக்குக் கிடையாது. போட்டியிடுவதற்கு எமக்கு பலமான எதிர்க்கட்சியொன்றே தேவை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் மகாவலி நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்தத் தெரிவித்த அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சியைப் பலவீனப்படுத்தி அதனூடாக வெற்றியீட்டுவது எமது நோக்கமல்ல. ஐ.தே.க.வில் மீண்டும் ஏற்பட்டுள்ள விரிசலுக்கு நாம் காரணமில்லை. தேர்தலை மறந்து ஐ.தே.க. மோதலில் ஈடுபட்டுள்ளது. இதனால் மக்கள் ஐ.தே.க. குறித்து நம்பிக்கை இழந்துள்ளனர்.

எமது அரசாங்கம் பரந்தளவில் சேவையாற்றி வருகின்றது. எம்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள் எழலாம். அவற்றை திருத்திக் கொள்ள நாம் தயாராக உள்ளோம்.

மக்கள் மீண்டும். ஐ.ம.சு.மு. வை வெற்றி பெற வைப்பது உறுதி. தேர்தலுக்கு முகம் கொடுக்க நாம் அஞ்சவில்லை. வரட்சி, இசட்புள்ளி போன்ற பல்வேறு பிரச்சினைகள் உள்ள நிலையில் தேர்தலை நடத்துகின்றோம்.



தேர்தல் தேவையில்லை என்றவர்களும் தேர்தல் நடத்துவதற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தவர்களும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது மகிழ்ச்சியளிக்கின்றது.

நாம் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து பிரசாரம் செய்வதற்கு முன்னுரிமை வழங்க உள்ளோம்.

இதனூடாக மக்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள், அபிப்பிராயங்கள் என்[illegible] குறித்து கவனத்தில் எடுக்கப்படும்.

அத்துடன் ஜனாதிபதி பங்கேற்கும் 8 கூட்டங்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதியிலும் செப்டெம்பர் முற்பகுதியிலும் நடத்தப்படும் என்றார். (அ–2)

# வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வெளிவாரிப் பரீட்சைகள்- 2010

**1.பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி-I-2010**
**2.பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி-II-2009 & 2010**
**3.சிறப்புக் கலைமாணி பகுதி-III-2009**

மேற்படி கலைமாணிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 24.08.2012 ( வெள்ளிக்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள் பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா 200/= ஆகும். யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால்மூலம் விண்ணப்பப்படிவத்தினை பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= க்கான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ. மீ. அளவுடைய தபால் உறையுடன் ***உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்*** என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.**

**முக்கிய குறிப்பு:–**

கலைமாணி கற்கைநெறி தொடர்பாக விரைவில் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவிருப்பதால், பழைய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்கள் மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து விரைவில் தங்கள் கற்கைநெறிகளை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
26.07.2012

(சி–632)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோட்டலில் சடலமாக மீட்கப்பட்டவர் தற்கொலையே செய்து கொண்டார்

## மருத்துவ அறிக்கையில் தகவல்

(பூந்தோட்டம்)

வவுனியா தனியார் விடுதியொன்றின் அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட குடும்பப் பெண் தற்கொலை செய்துள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல சிகை அலங்கரிப்பு சிகிச்சை நிலையமொன்றின் உரிமையாளரும் தொழிலதிபருமான கேதாரலிங்கம் விசாகினி (வயது 31) கடந்த 25 ஆம் திகதி வவுனியா கோவில்குளப் பகுதியில் அமைந்துள்ள தனியார் விடுதியொன்றின் அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இதனையடுத்து பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவ நிபுணரின் மருத்துவ அறிக்கையின் பிரகாரம் தூக்கில் தொங்கியதனால்தான் மரணம் ஏற்பட்டது எனவும் இது தற்கொலை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவரது சடலம் நேற்று முன்தினம் மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர் வி.கெயார் சிகை அலங்கரிப்பு நிலையத்தை யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2-266)

# ஆஸி.சென்ற 150 தமிழர்கள் நாடு கடத்தப்படும் சாத்தியம்

## திவயின தகவல்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைத் தமிழர்கள் நாடு கடத்தப்படவுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

சரணாகதி அடைந்த 150 இலங்கைத் தமிழர்களை நாடு கடத்த அவுஸ்திரேலிய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இலங்கையில் பாரியளவில் சித்திரவதைகளை அனுபவித்ததாக குறித்த அகதிகள் குறிப்பிட்ட தகவல்கள் பொய்யானவை என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. இவ்வாறு நாடு கடத்த தீர்மானிக்கப்பட்டோரின் உறவினர்கள் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை, இலங்கைத் தமிழர்கள் என சந்தேகிக்கப்படும் 80 பேரைக் கொண்ட படகு ஒன்று அவுஸ்திரேலியாவின் கொகோஸ் தீவுகளை சென்றடைந்துள்ளது.

அவுஸ்திரேலியா செல்லும் அனைத்து இலங்கையர்களும் தங்களை பொலிஸார் தேடுவதாக குற்றம் சுமத்தியுள்ள போதிலும் இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# சட்டவிரோத ஆயுத பாவனையை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

## பொலிஸ்மா அதிபருக்கு பவ்ரல் அமைப்பு கடிதம்

(கொழும்பு)

மாகாண சபை தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் சட்டவிரோத ஆயுத குழுக்களினால் சட்டவிரோத ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோனிடம் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி எழுத்து மூலம் கோரியுள்ளார்.

அக்கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இம்முறை அரசியல் வாதிகளுடன் கிரிமினல் சக்திகள் இணைவதற்கான சாத்தியமுள்ளதாக கூறியுள்ளார்.

இதனால் நிலைமை கட்டுக்கடங்காமல் செல்வதற்கு முன்னர் இவ்விடயம் குறித்து கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரிடம்தான் கோரியதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிரிமினல் வரலாற்றை கொண்ட நபர்கள் தமக்கு அரசியல் பாதுகாப்பை பெறுவதற்கு இத்தேர்தலில் அரசியல் வாதிகளுக்கு ஆதரவு வழங்க முன்வரக் கூடும். அரசியல்வாதிகள் தமது எதிரிகளை ஒடுக்குவதற்காக இச் சக்திகளின் ஆதரவை பெற முயலக்கூடும்.

இவ்வாறான நிலையில் சட்டவிரோத ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட வன்முறைகள் இடம்பெறக் கூடும் என கூறியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற தேர்தல்களின் போது கொலைகள், துப்பாக்கி பிரயோகங்கள் இடம் பெற்றுள்ளன. கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலின் போது ஜனாதிபதியின் ஆலோசகரான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 2012.07 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1493-மொஸ்கோவில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

★1540-இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியின் ஆணைப்படி தோமஸ் குரொம்வெல் நாட்டுத் துரோகம் செய்தவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார். அதே நாளில் ஹென்றி தனது ஐந்தாவது மனைவி கத்தரீனை மணந்தான்.

★1586-முதற்தடவையாக உருளைக்கிழங்கு பிரித்தானியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டது.

★1609-பெர்முடாவில் ஆங்கிலேயர்கள் குடியேறினர்.

★1794-பிரெஞ்சுப் புரட்சி: மாக்சி மிலியன் ரோப்ஸ்பியர் தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டான்.

★1821-பெரு ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றது.

★1914-முதலாம் உலகப் போர் ஆரம்பமானது. சேர்பியா மீது ஆஸ்திரியா- ஹங்கேரி போர் தொடுத்தன.

★1915-ஐக்கிய அமெரிக்காவின் ஹெயிட்டி முற்றுகை ஆரம்பமானது.

★1943-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் ஹாம்பூர்க் நகர் மீது பிரித்தானியா குண்டுத் தாக்குதல் மேற்கொண்டதில் 42 ஆயிரம் ஜேர்மனியர்கள் உயிரிழந்தனர்.

★1945-அமெரிக்க போர் விமானம் ஒன்று எம்பயர் ஸ்டேட் கட்டடத்தின் 79 ஆம் மாடியில் தவறுதலாக மோதியதில் 14 பேர் உயிரிழந்தனர்.

★1957-ஜப்பானின் இசகாயா என்ற இடத்தில் மழை மற்றும் மண்சரிவு காரணமாக 992 பேர் உயிரிழந்தனர்.

★1965-தெற்கு வியட்நாமில் அமெரிக்கப் படைகளின் எண்ணிக் கையை 75 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ஆக அதிகரிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி லின்டன் ஜோன்சன் அறிவித்தார்.

★1976-சீனாவில் டங்ஷான் நகரில் இடம் பெற்ற நிலநடுக்கத்தில் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 769 பேர் உயிரிழந்தனர். ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 851 பேர் காயமடைந்தனர்.

★1996-வோஷிங்டனில் கென்னவிக் என்ற இடத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

★2005-ஐரியக் குடியரசு இராணுவம் தனது 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தை முடிபுக்குக் கொண்டு வருவதாக அறிவித்தது.

★2005-இங்கிலாந்து பேர்மிங்காம் நகரைச் சூறாவளி தாக்கியதில் 4,000,000 பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்தன. 39 பேர் காயமடைந்தனர்.


★2006-ஈழப்போர்: வாகரையில் இடம்பெற்ற போர் விமானங்களின் தாக்குதலில் பலர் உயிரிழந்தனர்.

பிறப்புக்கள்

★1936-சோபர்ஸ், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் துடுப்பாளர்

★1954-குகொ சவெஸ், வெனிசுவேலா ஜனாதிபதி

★1977-மனு ஜினோபிலி, ஆர்ஜெண்டீனிய கூடைப்பந்து ஆட்டக்காரர்



கலத்ராவா வடிவமைப்பில் உருவான கட்டடம்

### கட்டடக்கலைஞர் சந்தியாகோ கலத்ராவா

சந்தியாகோ கலத்ராவா ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஒரு கட்டடக்கலைஞராவார். இவரது வடிவமைப்புகள் இன்று உலகம் முழுவதிலும் பரவலான பிரபலம் பெற்றுள்ளன.

கலத்ராவா ஸ்பெயினிலுள்ள வலென்சியா என்னுமிடத்தில் பிறந்தார். அங்கேயுள்ள கலை மற்றும் கைவினைகள் கல்லூரியிலும் கட்டடக் கலைக் கல்லூரியிலும் பயின்று பட்டம் பெற்றார். இதனைத் தொடர்ந்து 1975 இல் சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரத்திலுள்ள சுவிஸ் பெடரல் பொறியியல் நிறுவனத்தில் சேர்ந்து குடி சார் பொறியியலில் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

புகழ்பெற்ற பிரான்ஸ் நாட்டுக் கட்டடக்கலைஞரான லெ கொபூசியே என்பவருடைய செல்வாக்கினால் உந்தப்பட்ட கலத்ராவா கட்டடக் கலையில் சிக்கலான வடிவங்களைப் புரிந்து கொள்வதும் அவற்றை உருவாக்குவதும் எப்படி என்பது குறித்து ஆராய்ந்தார். 1981 இல் அவரது முனைவர் பட்டத்துக்கான வெளிச் சட்டகங்களின் மடிக்கப்படக் கூடிய தன்மை பற்றிய ஆராய்ச்சிகளை நிறைவு செய்து கொண்டு கட்டடக்கலை மற்றும் குடிசார் பொறியியலில் தனது தொழிலைத் தொடங்கினார்.

தனித்துவமான படைப்பாற்றல் சார்ந்த பெரும் செல்வாக்கு மிக்க கலத்ராவாவின் பாணி வளைந்து கொடாத பொறியியலின் கோட்பாடுகளும் கட்டடக்கலையின் கவர்ச்சிமிக்க அழகியில் அம்சங்களும் இசையுடன் இணைந்த ஒன்றாகும்.

இவருடைய வடிவமைப்புக்களுக்கான வடிவங்களுக்கும் அமைப்புக்களுக்குமான கருத்துருக்கள் பெரும்பாலும் இயற்கைச் சூழலிலிருந்து பெறப்பட்டனவாகும். பாலங்கள் முதலிய சில குடிசார் பொறியியல் வேலைத் திட்டங்களுக்கான வடிவமைப்புக்களை இவரது வேலைகள் புதிய மட்டத்துக்கு எடுத்துச் சென்றன. இவர் பல தொடர் வண்டி நிலையங்களை வடிவமைத்துள்ளார்.

ஒளி பொருந்தியனவும் திறந்த அமைப்பும் இலகுவாகப் பயணம் செய்யத்தக்கதாகவும் இவ் வடிவமைப்புகள் அமைந்துள்ளன.

பொதுவாக ஒரு கட்டடக்கலைஞராகவே அறியப்பட்டாலும் கலத்ராவா ஒரு திறமையான சிற்பியும் ஓவியரும் ஆவார். கட்டடக்கலை என்பது இவை அனைத்தும் ஒன்று சேர்ந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச்சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் ஐந்தாம் நாளாகிய இன்று சனிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நக்கீரரும் திருமுருகாற்றுப்படையும் எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவினை க.ஈஸ்வரன் ஆற்றுவார்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆவரங்கால் அருள்முருகன் அறநெறிப் பாடசாலை, காரைநகர் புகழி சிவசுப்பிரமணிய அறநெறிப் பாடசாலை,புத்தூர் ஈஸ்வரன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் ஐந்தாம் நாளாகிய இன்று சனிக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை திருமுறைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாட்டு எஸ்.சுதாகரன், வயலின் எ.ஜெயராமன், மிருதங்கம் ஆர்.சிவராமன், முகர்சிங் என். சதீஸ்குமார் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# பகிரங்க ஏல விற்பனை

மல்லாகம் மாவட்ட/நீதவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்களும் துவிச்சக்கரவண்டிகளும் வேறு சில பொருட்களும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி பொருட்கள் அன்றையதினம் அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும் எனவும் ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களுக்கு உடன் பணம் செலுத்தி நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையினை கொண்டு வர வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (அ-2-9)

# தமிழக மீனவர்களை உடன் விடுவியுங்கள்

## புதுடில்லி கொழும்பிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 23 தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திற்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணா வலியுறுத்தியுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரத்தை சேர்ந்த 23 மீனவர்களை அவர்களுடைய படகுகளுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதற்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குறித்த சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரதமர் தலையிட்டு உடனடியாக தமிழக மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் கடிதம் எழுதியிருந்தார்.

தொடர்ந்து தமிழக மீனவர்கள் கச்சதீவு அருகே பழங்காலம் தொட்டு மீன்பிடித்து வரும் கடல் பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2 மாதங்களில் இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களைப் பிடித்து துன்புறுத்துவது, கைது செய்வது போன்ற சம்பவங்கள் வாடிக்கையாகி விட்டன என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்த பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்காவிட்டால் வரும் மாதங்களில் இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்க வாய்ப்புள்ளது என்பதையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே, இந்த பிரச்சினையில் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

முதலமைச்சரின் வேண்டுகோளை தொடர்ந்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று இலங்கை அரசுக்கு வலியுறுத்தி இருக்கிறார்.

மனிதாபிமான அடிப்படையில் அவர்களை உடனே விடுவிக்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (அ-2)

# ஐ.ஓ.எம். நிறுவனத்தால் முட்கம்பி வேலிகள் அமைப்பு

(தனங்கிளப்பு)

ஐ.ஓ.எம்.நிறுவனத்தின் நிதியுதவியுடன் மறவன்புலோ கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட 5 கிலோ மீற்றர் வயல் நிலப்பரப்பிற்கு முட்கம்பி பாதுகாப்பு வேலி அமைக்கப் பட்டு வருகிறது.

சிறுதானியப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்காக இம் முட்கம்பி பாதுகாப்பு வேலிகள் அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இப்பகுதியில் உள்ள மக்கள் வாழ் வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பயிர்ச் செய்கையை மேற்கொள்கின்றனர்.

எனவே, இச் சிறுதானியப் பயிர்ச் செய்கையின் போது கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை காணப்பட்டது. இவ்வாறு முட்கம்பி அமைக்கப்படாதுவிடின் விவசாயிகள் பெரும் நட்டத்தையே எதிர்கொள்ள நேரிடும்.

இது தொடர்பாக விவசாயிகள் பல தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்ததற்கு இணங்க மேற்குறித்த நிறுவனத்தினால் நிதி ஒதுக்கப்பட்டு முட்கம்பி அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-3-37)

# ஆணின் சடலம் மீட்பு


(பூந்தோட்டம்)

வவுனியா வேப்பங்குளம் வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றது. இது தொடர்பாக தெரிய வருவதாவது, வவுனியா வேப்பங்குளம் ஆறாம் ஒழுங்கையில் வசித்துவரும் தளையசிங்கம் ரமேஸ்வரன் (வயது 28) என்ற 6 மாத குழந்தையொன்றின் தந்தையே தனது வீட்டில் இவ்வாறு தூக்கில் தொங்கியவாறு மீட்கப்பட்டுள்ளார்.

வியாபாரம் மேற்கொண்டு வரும் இவர் தூக்கிட்டிருக்கலாம் எனவும் இது தொடர்பில் தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-2-266)

# நல்லூரான் திருவடிக்கு இன்று ஐந்தாம் திருவிழா



## காலடி வணங்க

ஊர் சிறக்க ஊரார் மனம் சிறக்க
கார் சிறக்க காரால் புவி சிறக்க
சுவர்வேல் சிறக்க வேலால் துயர் வேக
பார் சிறக்கப் பாரால் உயிர் சிரிக்க

வேலன் விழா வேண்டியது தரும் விழா
கோலம் கண்டிடவே வந்திடுக
காலம் இதை விட்டு வேறேதும் இல்லை
கடவுளாம் குமரன் காலடி வணங்க

*திருமதி. ஜெ. கந்தவேள், கொக்குவில்*

## நல்லைக்கந்தா சரணம்!

நல்லை நாதன் புகழ் பாடிடுவோம்
நாடும் அவன் புகழ் தேடிடுவோம்
இன்பங்கள் அருள வந்திடுவான்
இன்னல் யாவும் அகன்றிடவே
எம் இடர்கள் யாவும்
களைந்திடுவான்

*செ. பத்மசோதி, திருநெல்வேலி.*

## நல்லைக்கந்தா இடர் களைவாய்

நல்லை நகர் வேலா
நாளும் உன்னை வலம் வந்தோம்–எம்
இன்னல் எல்லாம் போக்க
பன்னிரு கரம் ஏந்தி வந்திடு ஆறுமுகா
எம் வினைகள் நீங்கி
சுகமாய் வாழ
அலங்கார கந்தனாய்
அமர்ந்தாயே நல்லையிலே
நல்லைக் கந்தா உன் நாமம் உச்சரித்தோம்
வேலேந்தி வினை தீர
வாரும் நல்லைக் கந்தா

*ஆ. கீர்த்தனா ,*
*யா/வேம்படி ம.உ.பாடசாலை, கலைப்பிரிவு 2012.*

## ஈராறு விழியாலே காத்தருள்வாய்

பல்லவி

வரம் ஒன்று நீ எனக்கு
தர வேண்டும் முருகா!–நல் (வரம்...)

அனுபல்லவி

அனுதினமும் உனை நினைத்து
அகம் குளிர்ந்து உனைப்பாட (வரம்...)

சரணம்

தீராத துயராலே இடர்படு மக்களையும்
ஆறாத புண்ணாக வடு சுமந்து நிற்போரையும்
மாறாத பிணியாலே பிணைப்பட்டிருப்போரையும்
ஈராறு விழியாலே காத்தருள் செய்திடவே! (வரம்...)

*ப. அருமைநாதன், (ஆசிரியர்), இணுவில்.*

## மனிதகுலம் வாழ வரமருள்வாயே!

வண்ணமா மலர் சூடி வாய்த்த மணி மாளிகையில்
வாகாக வீற்றிருந்து வரமருளும் முருகையா
விண்ணெழுந்த சீற்றமுடன் வந்தெழுந்த சூரனவன்
விரோதங் களைந்து விமோசனமளித்த வேலவா
பண்ணிசைக்கும் மாதிருவர் மனம்போல மாங்கல்யம்
பூண்டு மணம் புரிந்த மணிமார்பா
வெண்ணெயுண்ட மாயன் மருகா வேரவந்து
வீழ்ந்த மனிதகுலம் வாழ வரமருள்வாயே!

*கலாபூஷணம். மு. தணிகாசலம், கற்கோவளம்.*


நல்லூர்க் கந்தனே எங்களைக் காத்திடப்பா
அண்ணா தொழிலகம்
உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
அண்ணா கோப்பி
அண்ணா அரிசி மா
குரக்கன் மா
ஆட்டா மா
அண்ணா மிளகாய்த் தூள் வகைகள்
அண்ணா பத்தி வகைகள்
அண்ணா பற்பொடி
அண்ணா இனிப்பு வகைகள்

உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்தசத்துணவு; இரசாயனக் கலவை அற்றது
தொலைபேசி இல: 021 224 1565


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 201



உலகின் இரண்டாவது பெரிய நினைவுச்சிலை-சோவியத்தில்




2ஆம்உலக யுத்தத்தில் ஈடுபட்ட சோவியத் பெண்களை கௌரவிக்கும் விசேடமான நினைவுச்சிலை

இவர் அனுதாபம் காட்டினார் என்று சந்தேகப்படவே முடியாது- ருஷ்ய இராணுவம் தான் ஜேர்மனிய இராணுவ இயந்திரத்தைக் குலைநடுங்கச் செய்தது என்று ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப் படுத்தப் பட்டார். மேற்கு ஐரோப்பாவிலிருந்து நேசநாட்டு ஒன்றிணைந்த பயணப்படைகளின் உயர்மட்ட பிரதான தளபதி ஜெனரல் ஐசன்ஹோவர், "ருஷ்யர்களின் அற்புதமான தாக்குதல்கள்" குறித்து வியப்புத் தெரிவித்தார். "அவர்களின் மகத் தான வெற்றிகளுக்கு உரிய மதிப்பு" அளிக்க வேண்டிய தன் அவசியம் குறித்து எழுதினார். "குறிப்பாக ருஷ்யப் போர் வீரர்களுக்கு உரிய மதிப்பளித்து அமெரிக்கர்கள் தமது போர் வீரர்களின் நன்றியை தெரிவிக்கின்றனர். மூன்றாண் டுகள் இடையறாது நடைபெற்ற போராட்டத்தில் ஜேர்மனியர்களுடைய தாக்குதலின் முழுச் சுமையையும் தம் தோள்மீது தாங்கி அவர்களை எப்படி முறியடித்தனர் என்பதை நாம் கண்டோம்... இப்போராட்டத்தின் மையத்திலிருந்த ருஷ்ய போர் வீரர்களின் சேவைகளை நாகரிக உலகம் முழுவ

### யுத்தத்தின் முடிவுகளும் யுத்தம் கற்பித்த பாடங்களும்

...பாசிச ஜேர்மனியத் துருப்புகள் இரண்டாவது கோடைகாலத் தாக்கு தலைத் தொடுக்கும் அபாயம் சோவியத் யூனியனை எதிர் நோக்கியிருந்த, கடினமான 1942 மே மாத நாட்களில்

கூட இக்கூற்றுகள் ஆக்கிரமிப்பு வட்டங்கள், சர்வதேச பதற்றநிலை தணிவின் எதிரிகள் ஆகியோருக்கு ஆதரவாகக் கூறப்படுகின்றன. ஆனால், வரலாற்றின் உண்மைகளை மறுக்க முடியாது.


ஹிட்லரின் ஜேர்மனிக்கு எதிரான சோவியத் மக்களின் ஆயுதப் போராட்டம் சுமார் 4 ஆண்டுகள் நீடித்தது. இக்காலகட்டம் முழுவதும் சோவியத்- ஜேர்மனியப் போர்முனை தான் இரண்டாவது உலக யுத்தத்தின் முக்கியப்போர்முனையாக விளங்கியது. இக்காலகட்டம் முழுவதும் இது பாசிச ஜேர்மனி மற்றும் இதன் ஐரோப்பிய கூட்டு நாடுகளின் இராணுவங்களின் பெரும் பகுதியைக் கட்டிப் போட்ட நிலையில் வைத்திருந்தது. 1941- 1942 ஆம் ஆண்டுகளில் வேர்மஹ்டின் மொத்த டிவிசன்களில் 70-76 சதவிகிதம் சோவியத் யூனியனுக்கு எதிராகச் செயற்பட்டது என்றால் 2-4 சதவிகிதம் மட்டுமே பிரிட்டிஷ், அமெரிக்கத் துருப்புகளுக்கு எதிராக இயங்கியது. ஐரோப்பாவில் 1944 ஆம் ஆண்டு கோடையில் இரண்டாவது போர்முனை ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் கூட மொத்த பாசிச டிவிசன்களில் அரைப்பகுதிக்கும் மேற்பட்டவை சோவியத்- ஜேர்மனியப் போர்முனையிலிருந்தன. மேலைய நேச நாட்டினருக்கு எதிராக சராசரியாக மூன்றில் ஒரு பகுதி மட்டுமே செயற்பட்டது.

ஆயுதப்போராட்டத்தின் அளவிலும் உக்கிரத்திலும் கடந்த யுத்தத்தின் ஏனைய போர்முனைகளிலிருந்து சோவியத்- ஜேர்மனியப்போர்முனை பெரிதும் மாறுபட்டிருந்தது. இத்தாலியிலும் மேற்கு ஆப்பிரிக்காவிலும் போர்முனைகளின் நீளம் 300- 500 கி.மீ.களுக்கு மேற்படாமலும் மேற்கு ஐரோப்பாவில் 800கி.மீ ஆகவும் இருந்ததெனில் சோவியத்- ஜேர்மனியப் போர்முனையின் நீளம் யுத்தத்தின் பல்வேறு கட்டங்களில் 3000 முதல் 6200 கி.மீ. வரையிருந்தது.

இப்போது போர்நடவடிக்கைகளின் உக்கிரத் தன்மையை ஒப்பிடுவோம். இத்தாலியில் போர்முனை நிலவிய நேரத்தில் 74 சதவிகிதமும் வட ஆப்பிரிக்காவில் 29 சதவிகிதமும் மேற்கு ஐரோப்பாவில் 86.7 சதவிகிதமும் இவை நீடித்தன என்றால் சோவியத்- ஜேர்மனிய போர்முனை

2ஆம்உலக யுத்தத்தில் படைநடத்திய சோவியத் மார்ஷல் ஜுக்கவ் இன் நினைவுச்சிலைகள்







# யுத்தத்தின் முடிவுகளும் யுத்தம் கற்பித்த பாடங்களும்

ஜெனரல் மைக்கல் ஆர்துருக்கு ரூஸ்வெல்ட் பின்வரும் தந்தியை அனுப்பினார்: "பெரும் போர்த் தந்திர நோக்கிலிருந்து பார்க்கும் போது ஐக்கிய நாடுகளின் 25 அரசுகளும் ஒட்டு மொத்தமாகச் செய்வதைவிட ருஷ்யர்கள் அதிகமான எதிரிப்போர் வீரர்களைக் கொன்று குவிக்கின்றனர், எதிரியின் அதிக ஆயுதங்களையும் போர்த் தளவாடங்களையும் அழிக்கின்றனர் எனும் எளிய உண்மை தெள்ளத் தெளிவு".

கிரேட் பிரிட்டனின் பிரதமர் சர்ச்சில்- சோவியத் யூனியனின் மீது

தும் குறிப்பாக நன்கு மதிப்பிட வேண்டும்" என்று அமெரிக்கத் தரைப் படை சக்திகளின் தளபதி ஸ்திலுவேல் குறிப்பிட்டார். இது போன்ற கூற்றுகளின் பட்டியலை இன்னமும் தொடரலாம்.

ஆனால், யுத்தம் முடிந்த பின் அமெரிக்கா, பிரிட்டன் ஏனைய முதலாளித்துவ நாடுகளில், பாசிசத்தை முறியடித்ததில் சோவியத் யூனியனின் பங்கை குறைத்து மதிப்பிடும் கூற்றுகளைப் பூர்ஸ்வா வரலாற்றாசிரியர்களும் இராணுவப் பிரமுகர்களும் வெளியிட ஆரம்பித்தனர். இன்றும்

யில் தீவிரப்போர் நடவடிக்கைகள் 93 சதவிகித நேரம் நீடித்தன.

சோவியத்- ஜேர்மனியப் போர் முனையில்தான் ஜேர்மனி மற்றும் அதன் துணை நாடுகளின் பிரதான சக்திகள்- 607 டிவிசன்கள்- அழிக்கப்பட்டன. வடக்கு ஆபிரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் நேசநாட்டினர் மொத்தம் 176 டிவிசன்களை சிதறடித்து சிறைபிடித்தனர். சோவியத் துருப்புகளுக்கு எதிராக நடைபெற்ற சண்டைகளில் பாசிஸ்டுகள் பெரும் பகுதி பீரங்கிகள், டாங்கிகளையும் மூன்றில் ஒரு பங்கு விமானங்களையும் 1600 க்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள், போக்குவரத்துக் கப்பல்களையும் இழந்தனர். பாசிச ஜேர்மனியின் தரப்பில் 13.6 மில்லியன் பேர்கள் காயமடைந்தனர். கொல்லப்பட்டனர். தொலைந்து போயினர். இதில் 10 மில்லியன் பேர்கள் சோவியத்- ஜேர்மனியப் போர்முனையில் பாதிக்கப்பட்டவர்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் நாடு திரும்பும்போது செங்கம்பளம் விரிக்க முடியாது

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

**சட்டபூர்வமான முறையில் வெளிநாடுகளுக்கு சென்று ஐக்கிய நாடுகள் சபையிடம் முறைப்பாடுகளை செய்துவிட்டு நாடு திரும்புவோர் எவ்வாறான முறைப்பாடுகளை செய்துள்ளனர் என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதுடன் அகதிகள் நாடு திரும்பும் போது செங்கம்பளம் விரிக்கமுடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

அவுஸ்திரேலியாவிலிருந்து நாடு திரும்பிய அகதியொருவரை இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் இலங்கைக்கு திரும்பும் அகதிகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் இல்லையென்றும் அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவுஸ்திரேலியாவின் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன என ஊடகவியலாளர் வினவினார். அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், சட்டவிரோதமாக நாடு கடந்து சென்ற அகதிகள் நாட்டுக்கு திரும்பும்போது விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். சட்ட ரீதியில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.

சட்டரீதியாக வெளிநாடுகளுக்கு சென்று அகதிகளாக அந்தஸ்துக்கோருவோரும் சட்ட விரோதமான முறையில் அகதிகளாக செல்வோர் என இரண்டு பிரிவினர் இருக்கின்றனர்.

அவ்வாறான அகதிகள் நாட்டுக்கு திரும்பும் போது செங்கம்பளம் விரித்து வரவேற்க முடியாது. நாட்டின் சட்டத்தின் பிரகாரம் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என்றார். (அ-2)

## நிர்வாகக்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தையிட்டி, ஊறணி, காங்கேசன்துறை ஆகிய இடங்களுக்கான மீள்குடியேற்றப் பணிக்கான நடவடிக்கைக்குழு நிர்வாகக் குழுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வழமையான இடத்தில் நடைபெறுமென தலைவர் அறிவித்துள்ளார்.

எனவே, மேற்படி கூட்டத்திற்கு நிர்வாகக் குழுவினரைத் தவறாது சமுகம் தருமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

## குடிசைக் கை.தொ.கண்காட்சிக்கு இலவச போக்குவரத்துச்சேவை

(மல்லாவி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஒருங்கிணைப்புடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அமுலாக்கத்தில் 10 இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை உருவாக்கும் வாழ்வு எழுச்சி திட்டத்தின் முன்னோடி நிகழ்வாக குடிசைக்கைத்தொழில் ஊக்குவிப்பு மாவட்ட கண்காட்சி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியின் போது 45 வகையான சிறுகைத்தொழில்கள் உட்பட இயந்திர கண்காட்சிகளும் உள்ளடங்கியதாக அமைந்துள்ளது.

இக்கண்காட்சியை பார்வையிட வருகை தருபவர்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட 6 பிரதேச செயலகங்களில் இருந்தும் இரண்டு நாட்களும் காலை 6 மணிக்கு இலவச போக்குவரத்துச்சேவை நிகழ்வு மண்டபம் வரை நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் தொழில் தேடும் இளைஞர், யுவதிகள் இக் கண்காட்சியினை பார்வையிடுவதன் மூலம் பயனடைய முடியுமென முல்லைத்தீவு மாவட்ட கைத்தொழில் ஊக்குவிப்பு முகாமையாளர் பு.றமணன் தெரிவித்துள்ளார். (அ-3-15)




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இவ்வாண்டுக்கான ஆங்கிலதின நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மாணவ ஆசிரியர்களின் கலைநிகழ்வினையும் படங்களில் காணலாம்.

## மோட்டார் சைக்கிள் திருத்துநர் தொழிற்பயிற்சி

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் மோட்டார் சைக்கிள் திருத்துநர் தொழிற்பயிற்சி கற்கைநெறி நாளை மறுதினம் நல்லூர் பிரதேச செயலகம் முன்னர் இயங்கி வந்த பலாலி வீதி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியினை கற்க விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண தொழிற்பயிற்சி அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் அறிவித்துள்ளார். விண்ணப்பதாரிகள் சுயவிபரக் கோவையை பூர்த்தி செய்து நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, இல.375, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 222 7949, 075 0411104 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்துவதன்மூலம் மேலதிக விபரங்களைப் பெற முடியுமென அவர் அறிவித்துள்ளார். (அ-2-9)

## பெற்றோலிய வளம் குறித்த இரு சட்டங்களில் திருத்தம்

### பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பெற்றோலிய வளம் தொடர்பான இரண்டு சட்டங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு பெற்றோலிய வளத்துறை அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எஸ்.சமரதுங்க தெரிவித்துள்ளார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த இரண்டு சட்ட திருத்தங்களும் சட்டமா அதிபரின் அனுமதியைப் பெறும் வகையில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்தவுடன் அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்தின் அனுமதிக்காக அவை சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இந்த சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பெற்றோலிய நெறிப்படுத்தல் நடவடிக்கைகள் மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் கூறினார்.

அத்தோடு எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்தும் மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு ஆராயவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

TEACHING HOSPITAL - JAFFNA
BID NOTICE

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna will receive sealed bids from the qualified Contractors for the following work.

| Work/Service Details | Security Deposit (Rs.) | Non-refundable Deposit(Rs.) (Bid fee) | Approximate Direct Cost of the work (Rs.In.Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Modification of General Stores | 45,000.00 | 1,000.00 | 2.8 | C8 |

Bid Forms may be obtained from Director, Teaching Hospital, Jaffna upon Producing Valid Registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff 's Office, Teaching Hospital, Jaffna till 09/08/2012.

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Director, Teaching Hospital, Jaffna or could be deposited in the bid box kept at Director Office, Teaching Hospital, Jaffna.

Bids Will be accepted till 3.00 pm on 10/08/2012 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

Director(Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
26/07/2012.


c 631

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

20-VIII



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

தென்னை ஒரு பல்லாண்டு மரமாகவிருப்பதும் அதனது உற்பத்தியினளவு அதிகரிக்க வேண்டிய தேவையும் எமது பிரதேசத்தில் நுகரப்படும் தேங்காய்களோடு ஒப்பிடுகையில் இன்னும் எமது தேவை அதிகமானதாக இருப்பதையை குறித்துக் காட்டுகின்றது.


தென்னை, பனை, கமுகு இன்னும் கித்துள் என பனை சார்ந்த குடும்பத்து மரங்களின் தேவை திட்டமிட்டு அதிகரிப்பட வேண்டும்.

எமது வேளாண் சூழல் தொகுதியினுள்ளே இத்தாவரம் சார்ந்ததன் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் இருப்பது இன்னும் இந்த வளத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலிந்துணர்த்தியிருக்கின்றது.

தென்னை மரக்கன்றுகளின் நடுகையும் இதற்காக தென்னம் நாற்று மேடைகள் பரவலாக போடப்பட்டிருப்பதும், தென்னை அபிவிருத்தி சபையின் திட்டமிட்ட காலத்திற்கேற்ற கைங்கரியமெனினும் அவரவர் வீட்டில் தென்னையை நாட்டி பயன்பெற இன்னும் ஊக்கம்ளிக்கப்பட வேண்டுமென்பது இங்கு உணரப்பட்டிருக்கின்றது.

போரின் பிடியில் சிக்கி இழந்த தென்னை மரங்களை உருவாக்கிவிட வேண்டும் என்பது எதிர்பார்ப்பாகும்.

ஒரு பக்கத்தில் தென்னை நாற்றுக்களை நடுகை செய்வதை ஊக்கப்படுத்தும் அதேவேளையில் இருக்கின்ற தென்னைகளின் விளைச்சலை அதிகரிக்கவும் அவற்றை தகுந்த முறையில் பராமரிக்கவும் ஆவன செய்தல் வேண்டும்.




நீண்ட காலமாக பராமரிப்பு இல்லாதிருக்கும் தென்னை மரங்களை இவ்வளத்தை மேம்படுத்தும் செயற்பாட்டிலும் அனைவரும் இணைந்து முனைப்புக் காட்டுதல் காலத்தின் தேவையாகும்.

அச்சுவேலியில் அமையவிருக்கும் தொழிற்பேட்டையினுள் தேங்காய் யெண்ணெய் உற்பத்தி உள்ளடங்கியிருப்பதுவும் தென்னந்தும்பு உற்பத்தியும் குடாநாட்டின் பல பகுதிகளில் மீளவும் உருவாகியிருப்பதும் நல்ல எதிர்கால சூழலை குறித்துக் காட்டியிருக்கின்றது.

அதேநேரத்தில் இருக்கின்ற தென்னை மரங்களை பாதுகாத்து வளமான இன்னும் கூறினால் தேகாரோக்கியமுடையதாக ஆக்கினால் மட்டுமே பீடைகளின் பிரச்சினைகளிலிருந்து விடுபட ஏதுவாயிருக்கும். நலிந்து சோடை போன தென்னைமரங்கள் அநேகமான பீடைகள் பெருகும் இடமாக இருப்பதனை இங்கு கவனித்துக் கொள்வது நல்லது.

இதுவரையும் நாம் அலசியாராய்ந்த தென்னம் பீடைகளை ஒருகணம் மீட்டுப் பார்த்தால் அநேகமானவற்றின் விருத்திக்கும் பரவலுக்கும் இன்னும் அவற்றின் தீவிர தன்மைக்கும் நலிந்த, இறந்து போன மரங்களும் இன்னும் கவனிப்பாரற்று நீண்ட காலமாக தேங்காய்களை உற்பத்தி செய்யாத மரங்களையும் பக்குவமாக அகற்ற வேண்டும். அதற்காக இதனையே காரணங்களாக வைத்து




நல்ல வளமான மரங்களை தறித்தெடுத்தலை தவிர்த்திடவும் வேண்டும்.

காண்டர்மிருக வண்டு, சிவப்பு நீள் மூஞ்சி வண்டு, தென்னை இலையரிபுழு, தென்னஞ் சிற்றுண்ணி, இன்னும் தென்னையைத் தாக்குகின்ற சாறு உறுஞ்சும் பூச்சிகளான லேஸ் வண்டு, தத்திகள், செதில் பூச்சி மற்றும் மாவுப் பூச்சி என ஒரு தொகுதி பீடைகளும் இன்னும் அதி தீவிர நோயாக்கலுக்கான காரணி யான பூஞ்சணம், பற்றீரியா, வைரசு இன்னும் பைற்றோபிளாஸ்மா ஆகியனவும் தப்பித்து தங்கி வாழ இறந்த மற்றும் நலிந்த தென்னைகள் உதவி செய்கின்றன.

இவற்றை இனங்கண்டு பாதுகாப்பாக அகற்ற வேண்டும். இதனுடன் தென்னை மரத்தில் பீடையாக, நோயாக, இருக்கும் காரணிகள் இவற்றில் தங்கியிருக்கும் வாய்ப்புகள் அதிகம்.

தென்னையைத் தாக்கும் நோய்களுள் வட்டமுகல் (Crown rot) முக்கியமானது. இதனை பைற்றோப்தோறா பாமிவோறா (Phytophthora palmivora) எனும் பூஞ்சணம் ஏற்படுத்துகின்றது.

இதனுடன் இலைப் புள்ளி நோயை சேர்க்ஸ்போரா (Cercospora) எனும் பூஞ்சணமும் இலை வாடல் நோயை பைற்றோபிளாஸ்மா எனும் நுண்ணங்கியும் ஏற்படுத்துகின்றன.

தென்னையில் வைரசு நோய்களின் தாக்கமும் ஆங்காங்கே அறிவிக்கப்பட்டாலும் எமது பிரதேசத்தில் இதனது தாக்கம் குறைவாகவே இருக்கின்றது.

நாற்று மேடையில் நாற்றழுகலும் (Seedling rot) கறையானினது தாக்கமும் தீவிரமாக இருக்க காணப்பட்டுள்ளது.

இவற்றுடன் நாற்றுக்களிலும் இளந் தென்னைகளிலும் இலையரி வண்டான பிளெக்கிகிஸ்பா (Plexihispa) வினுடைய தாக்கம் இருப்பதாக தென்னிலங்கையில் பதியப்பட்டுள்ளது.

எமது பகுதிக்கு இவ்வாறான பீடைகளும் நோய்களும் புதிதாக வந்து சேராதவாறு நாம் ஒரு கண்காணிப்பு பொறிமுறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலமே புதிதாக வந்தேறும் பீடைகளையும் நோய்களையும் விரைந்து இனங்கண்டு அவற்றை தொடர்ந்து பரவ விடாமலும் முகாமைத்துவப்படுத்தவும் முடியும்.

பயிர் பாதுகாப்பு பொறிமுறை முழுமையாக வடபகுதிக்கு ஏற்படுத்தப்பட்டால் மாத்திரமே இனிவரப்போகும் பீடைகளினாலான சவாலுக்கு நாம் அனைவரும் இணைந்து முகங்கொடுக்க முடிவதோடு எங்களூர் விவசாயத்தையும் விவசாய பெருமக்களையும் இத்தகைய சவால்களில் இருந்து காப்பாற்ற முடியும்.

வாருங்கள் அனைவருமிணைந்து முயற்சி செய்வோம். (வளரும்)

# சட்டத்திற்கு மேலாக யாருமே இல்லை
# ரிசாத்தை பாதுகாக்கும் நோக்கமும் இல்லை

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

மனுவை தாக்கல் செய்கின்ற தரப்பு தமக்கு அச்சுறுத்தல் இருப்பதாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருமாயின் அச்சுறுத்தல் விடுக்க வேண்டாம் என நீதிமன்றம் பிரதிவாதி தரப்பிற்கு அறிவுறுத்தும் என்பதுடன் சட்டத்திற்கு மேலே யாருமே இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மன்னார் நீதிமன்றம் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது மற்றும் நீதிவானுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் கீழ் அவரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் அவரை பாதுகாக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அறிய முடிகின்றது. இது உண்மையா? என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அமைச்சர்,

சட்டத்தில் சிற்சில ஏற்பாடுகள் இருக்கின்றன. பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. பாதுகாக்கும் நோக்கமும் இல்லை. சட்டத்திற்கு மேலே யாரும் இல்லை என்பதுடன் அச்சுறுத்தல் இருப்பதாக மனுதாரர் தரப்பு நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தால் அச்சுறுத்தல் விடுக்க வேண்டாம் என பிரதிவாதி தரப்புக்கு நீதிமன்றம் அறிவுறுத்தும்.

அதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கு ஞாபகம் இல்லையாயின் அது தொடர்பில் அவரை பரிசோதனைக்கு உட்படுத்திய வைத்தியரிடமே கேட்க வேண்டும். மீளவும் ஞாபகம் கொடுப்பதற்கு என்னால் முடியாது.

அது மட்டுமின்றி நாட்டில் தற்போது மின்வெட்டு அமுல்படுத்தப்படவில்லை. புத்தளம்-நுரைச்சோலை லக்விஜ, கெரவலப்பிட்டிய ஆகிய மின் உற்பத்தி நிலையங்களில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறுகளே திருத்தப்படுகின்றன என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் ஆபத்து நிறைந்த படகுப்பயணத்தை மேற்கொள்வதன் பின்னணி என்ன...?

அவுஸ்திரேலியாவைத் தளமாகக்கொண்ட *கிளவுஸ்ரர் அட்வகேற்* எனும் ஊடகத்திற்கு செய்தியாளர் *பென்டொஹெற்றி* எழுதிய கட்டுரை

இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு பயணமாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக தமிழ் மக்களே அதிகம் செல்கின்றனர். இதுவரை இலங்கையைச் சேர்ந்த 1541 புகலிடக்கோரிக்கையாளர்கள் அவுஸ்திரேலியாவை அடைந்துள்ளனர். கடந்த ஆண்டைவிட தற்போது 700 பேர் அதிகம் பயணமாகியுள்ளனர்.

இலங்கையின் மேற்குக் கரையில் அமந்துள்ள பின்தங்கிய கிராமம் ஒன்றிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு பயணமாகும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. இக்கிராமத்தில் உள்ள வீடுகள் கிடுகுகளால் வேயப்பட்ட கூரைகளைக் கொண்டுள்ளன. இக்கிராமத்தைச் சேர்ந்த பலர் அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்து சென்றுவிட்டனர். ஏனை யோர் அங்கு செல்வதில் விருப்பம் கொண்டுள்ளனர்.

இக்கிராமத்திலிருந்து படகுகள் மூலம் கிறிஸ்மஸ் தீவை அடைவோர், தாம் பாதுகாப்பாக இருப்பதாக தொலைபேசிகளில் தெரிவிக்கின்றனர். சிலர் படகுகளில் ஏறுவதற்கு தயாராகும் போதும், படகுகளில் செல்லும் போதும் இலங்கைக் கடற்படைப் படகுகளால் வழிமறிக்கப்பட்டு மீண்டும் கரைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். இவ்வாறு படகுப் பயணம் மேற்கொண்டோரில் சிலரிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

இந்தக் கிராமத்திலிருந்து 500பேர் வரையானோர் அவுஸ்திரேலியா சென்றுவிட்டனர். என கடற்கரை நோக்கி தனது கைகளை அசைத்தவாறு கஜன் என்ற அங்குவாழும் நபர் ஒருவர் கூறுகிறார். "அவுஸ்தி ரேலியா நோக்கிப் புறப்படுவோர் பாதுகாப்பாக அங்கு சென்றடைவதை அறிந்த எமது கிராமத்தவர்கள் தாமும் அங்கு செல்ல விருப்பப்படுகின்றனர். அவர்கள் அங்கு வாழ விரும்புகின்றனர்" எனவும் அந்நபர் தெரிவித்தார்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட அவரின் மருமகனும், அவரது நண்பன் ஒருவரும் ஒரு மாதத்துக்கு முன்னர் அவுஸ்திரேலியாவுக்கு பயணமாகியிருந்தனர். படகில் பயணம் மேற்கொண்ட இவர்கள் மூன்று வாரங்களின் பின்னர் கிறிஸ்மஸ்தீவை அடைந்தனர். "அவர்கள் உழைப்பதற்காகவே அங்கு சென்றனர். எங்களால் இங்கு வாழமுடியாது அவர்கள் தற்போது அங்கு சென்றுள்ளதால், எமக்கு அவர்கள் ஆதரவாக இருப்பார்கள்" என மேற்குறிப்பிட்ட கஜன் என்ற நபர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் தொடரப்பட்ட குருதி தோய்ந்த உள்நாட்டு யுத்தமானது நிறைவுக்கு கொண்டுவரப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்த நிலயில் கூட இந்நாட்டில் தமிழ் மக்கள் சிறந்த வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை அரசாங்கம் இன்னமும் வழங்கவில்லை என அவர் சுட்டிக்காட்டினார். "தொழில் வாய்ப்பை பெறமுடிவில்லை; கல்வி கற்கமுடியவில்லை; இலங்கை இராணுவம் மற்றும் காவற்துறையினர் எமக்கு தொடர்நதும் அழுத்தங்களைக் கொடுக்கின்றனர்; நாங்கள் மிகவும் குழப்பம்டைந்த நிலையில் வாழ்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாண்டில் இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு பயணமாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக தமிழ் மக்களே அதிகம் செல்கின்றனர். இதுவரை இலங்கையைச் சேர்ந்த 1541 புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்திரேலியாவை அடைந்துள்ளனர். கடந்த ஆண்டைவிட தற்போது 700 பேர் அதிகம் பயணமாகியுள்ளனர்.

அத்துடன் இலங்கையைவிட்டு சட்டரீதியற்ற முறையில் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்டதன் பேரில் 700பேர் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த இரு வாரத்தில், நாட்டை விட்டு தப்பிச் செல்ல முற்பட்ட 334பேர்கைது செய்யப் பட்டதாக கடற்படைத் தளபதி கோசல வர்ணகுல சூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு படகுமூலம் தப்பிச் செல்வோரை கைது செய்வதற்காக இலங்கை கடற்படை, காவற்றுறை



மற்றும் வான்படை ஆகியோர் கரையோரங்களில் குவிக்கப்பட்டுள்ளனர். பருவப்பெயர்ச்சிக் காற்றானது இன்னமும் பலமாக வீசத் தொடங்காமையாலேயே இவ்வாறு படகு மூலம் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தை இவர்கள் வேகமாக கடந்துசெல்ல முடிவதாகவும் இலங்கை காவற்துறைப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார். புகலிடக் கோரிக்கையாளர்கள் மிக இலகுவாகவும், சிக்கனத்துடனும் செல்லக் கூடிய நாடாக அவுஸ்திரேலியா காணப் படுவதாகவும் இவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு தப்பிச் சென்றவர்களுள் 99 சதவீதமான மக்கள் தமிழர்கள் ஆவர். இவர்களது உறவுகள் அவுஸ்திரேலியாவில் உள்தால் இவர்களின் அழைப்பின் பேரிலேயே செல்கின்றனர் என இலங்கை காவற்துறைப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்கள் தற்போதும் சித்திரவதைப் படுத்தப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டை ரோகண ஏற்க மறுத்துள்ளார்.

இவர்கள் இலங்கை தொடர்பாக கூடாத, மோசமான கருத்தைப் பரப்புகின்றனர். சட்டரீதியற்ற வகையல் ஆட்கடத்துவோர் வருவாயை ஈட்டிக் கொள்வதற்காகவே இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றனர். தமக்கெதிராக இலங்கையில் சித்திரவதைகள் மற்றும் பாரபட்டசங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் தமிழ் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். இதில் எவ்வித உண்மையுமில்லை எனவும் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

இதில் கூறப்படும் கிராமத்தின் பெயர் இங்கு குறிப்பிடப்படமாட்டாது. அவ்வாறு குறிப்பிட்டால் தமக்கும், தமது குடும்பத்தவர்களுக்கும் இலங்கை அரசாங்கத்தால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படலாம் என இக்கிராமத்து வாழ் மக்கள் கருதுகின்றனர்.

இக்கிராமத்தில் வாழும் ஒவ்வொரு வீட்டிலும் அவுஸ்திரேலியப் பயணம் தொடர்பாக பல்வேறு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. 18 நாட்களுக்கு முன்னர் தருணாவின் 27 வயதான மகன் அவுஸ்திரேலியா பயணமாகியிருந்தார். இவர் பேரூந்து ஒன்றின் மூலம், தான் செல்ல வேண்டிய படகைச் சென்றடைந்தார். தான்நாட்டை விட்டுப்புறப்படுவதாக தொலைபேசி மூலம் தெரிவித்திருந்ததாகவும், அதன் பின்னர் அவரிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கப் பெறவில்லை என இவரது தாயார் கூறுகின்றார்.

இங்கிருந்து புறப்படுகின்ற ஒவ்வொருவரும் அவுஸ்திரேலியாவைச் சென்றடைந்தவுடன் தொலைபேசி மூலம் அறியத்தருகின்றனர். ஆனால், எனது மகனிடமிருந்து பதிலெதுவும் கிடைக்கவில்லை. அதற்காக நான் காத்திருக்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார். இந்தப் பயணம் ஆபத்தானது. என்னைப் பொறுத்தளவில் எனது மகன் செல்வதற்கு நான் அனுமதிக்கவில்லை. இருந்தும் எனக்கு நான்கு பிள்ளைகள். அவர்களைப் பராமரிக்க வேண்டிய தேவையுள்து எனவும் தருணா தெரிவித்தார்.

இரு மாதங்கிளின் முன்னர், அவுஸ்திரேலியாவிற்கு செல்ல முற்பட்ட படகொன்று இலங்கை கடற்படையால் தடுக்கப்பட்டது. அதில் பயணம் செய்திருந்த கதின் என்பவர் பார்ப்பதற்கு மெலிந்தும்களைப்படைந்தும் காணப்பட்டார். படகிலிருந்து இவரைக் கைது செய்து ஒரு மாதகாலம் சிறையில் அடைத்திருந்தனர்.

இது மிகக்கடினமானது. எங்களால் நித்திரை கொள்ள முடியவில்லை. உணவைப் பெறுவதிலும் நெருக்கடி காணப்பட்டது. என கூறுகின்றனர்.சிறையிலிருந்த இவரது சகோதரிகள் பணம் செலுத்தி வெளியில் எடுத்துள்ளனர். இவரது விடுதலைக்காக பல பத்தாயிரங்கள் செலவாகியுள்ளன. இவர்கள் இந்தப்பணத்தை யாருக்கு, எதற்காக செலுத்தினார்கள் என்பது தொடர்பாக விரிவாக கூறவிரும்பவில்லை. இவ்வாறான தகவல்கள் அவர்களது குடும்பத்தவர்களுக்கு ஆபத்தைக் கொடுக்கும் என இந்தக் கிராமத்து மக்கள் கருதுகின்றனர்.

பொருளாதாரத்தை மேம்படுத்த ஒருதொகுதி மக்களும், மிகமோசமான, சித்திரவதைக்குள்ளாகிய மக்கள் அதிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதற்காகவும் அவுஸ்திரேலியா நோக்கிப் படையெடுக்கின்றனர். வெள்ளை வான் கடத்தில் சம்பவங்கள் தற்போது இலங்கையில் அதிகரித்துள்ளது.

இலங்கையில் தற்போது அதிகரித்துவரும் சித்திரவதைகள், துன்புறுத்தல் சம்பவங்கள் தொடர்பாக அண்மையில் வெளியிடப்பட்ட ஐ.நா. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கிராமமானது ஒருபோதும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கவில்லைஎனவும் தமிழ் மக்கள் என்ற ஒரே காரணத்தினால், மட்டுமே தாம் இலக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இவ்வாறான ஆபத்தான படகுப்பயணம் மூலம் இலங்கை வாழ்தமிழர்கள் அவுஸ்திரேலியாவை அடைகின்றபோதும் இவர்களுக்கான குடியுரிமை அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்குமா என்கின்ற சந்தேகம் நிலவுகின்ற போதிலும்கூட, இவ்வாறான புகலிடக்கோரிக்கையாளருக்கு அவுஸ்திரேலியக் குடியுரிமை வழங்கப்படும் என பலர் நம்புகின்றனர்.

தான் அவுஸ்திரேலியாவுக்கு செல்வதற்கான தனது சந்தர்ப்பம் ஒன்றை இழந்துவிட்டேன் ஆனால், எனதிடத்தில் உள்ள ஏனையோர் இந்தச் சந்தர்ப்பத்திற்காக முயற்சிப்பர். என கதின் கூறுகின்றார். தான் இனி ஒருபோதும் அவுஸ்திரேலியா செல்வதற்கு முயற்சிக்க மாட்டேன் என சிறையிலிருந்து விடுதலையாகிய கதின் கூறுகின்றார்.

இவ்வாறான பல்வேறு ஆபத்துக்கள் மற்றும் கைது செய்து சிறையிலடைத்தல் போன்ற எந்தவொரு நெருக்கடி ஏற்பட்டாலும், அவுஸ்திரேலியாவுக்கு செல்கின்ற விருப்புடன் இக்கிராமத்து இளைஞர்கள் பலர் உள்ளனர் என்பதே உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ/த பரீட்சையில் நான்காவது தடவையாக தோற்ற அங்கீகாரம் பெறப்படும்

## உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.

(கொழும்பு)

**கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மூன்று தடவைகள் தோற்றி பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படாத மாணவர்கள் நான்காவது தடவையும் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அங்கீகாரம் அமைச்சரவையில் பெற்றுக் கொள்ளப்படும் என்பதுடன் இசட் புள்ளியினால் விரக்தியடைந்த மாணவர்களையும் பல்கலைக்கழகங்களுக்குள் உள்ளீர்ப்பது தொடர்பில் ஆராயப்படும் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

புதிய, பழைய பாடத்திட்டங்களின் பிரகாரம் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு தனித்தனியாக இசட் புள்ளியை கணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இசட் புள்ளி தொடர்பில் மாணவர்கள் முதலில் பிரச்சினையை எழுப்பவில்லை. தொழிற்சங்கமும் ஏனைய அரசியல் கட்சிகளுமே பிரச்சினைகளை எழுப்பின. அவர்களே நீதிமன்றத்தையும் நாடினர்.

உயர்தரப் பரீட்சையில் இரண்டாம் மற்றும் மூன்றாம் தடவையாக தோற்றியோருக்கு தனியாகவும் முதன்முறையாக தோற்றியோருக்கு தனியாகவும் இசட் புள்ளி கணிக்கப்பட்டது. சட்டத்திற்கு தலைவணங்கி அதற்கு கடமைப்பட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை முழுமையாக அமுல்படுத்தியுள்ளோம்.

நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் இசட் புள்ளி வெளியானதன் பின்னர் மாணவர்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர். இதில் மாணவர்களுக்கு அசாதாரணம் இழைக்கப்படவில்லை. இசட் புள்ளி தொடர்பில் மாணவர்கள் விரக்தியடைந்துள்ளனர்.

விரக்தியடைந்த மாணவர்களை தேடியறிந்து அவர்களின் தரவுகளை திரட்டி அவர்களையும் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்குவது தொடர்பில் ஆராயப்படும். இடவசதிகள் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் கலந்துரையாடப்படும்.

உயர்தரப் பரீட்சையில் நான்காவது தடவையாக தோற்றி சித்தியடைந்த மாணவர் ஒருவர் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க முடியாது. அவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குவதாயின் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அது தொடர்பில் ஆராயப்படுகின்றது.

ஏற்கனவே வெளியிடப்பட்ட இசட் புள்ளி இரத்து செய்யப்பட்டுள்ளது. அதனால் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு சவால் விடுக்க முடியாது. இந்த விடயத்தில் இரகசியம், ஊழல், மோசடி, களவு எதுவுமே இல்லை. நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு தலைவணங்கியுள்ளோம்.

இசட் புள்ளி விவகாரத்தில் மாணவர்களுக்கு அசாதாரணம் இழைக்கப்படவில்லை. மாணவர்கள் விரக்தியடைந்துள்ளனர் என்பதுடன் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கின்ற உயர்தரப் பரீட்சை பிற்போடப்படமாட்டாது என்றார். (அ-2)

### நல்லூரில் திருடியவர்கள் விளக்கமறியலில்


(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் ஆலயத்தில் நகைகளை திருடிய திருட்டுக் கும்பலுக்கு யாழ். நீதவான் மா.கணேசராசா விளக்கமறியலில் வைத்துள்ளார்.

நல்லூர் ஆலயத்தில் நகைகளை திருடினர் என்ற குற்றச்சாட்டில் புத்தளம் தில்லையடியை சேர்ந்த 4 பெண்கள் உட்பட ஏழு பேர் யாழ்.பொலிஸாரினால் கடந்த 25 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் யாழ்.நீதவானின் வாசஸ்தலத்தில் யாழ். பொலிஸாரினால் மூற்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் எழுவரினையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-4)



யுத்த சூழ்நிலை முடிவடைந்து மூன்று வருடங்களை கடந்துள்ள நிலையில் பெருந்தொகையான உந்துருளிகள் வெயிலில் காய்கின்றன. உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தால் மக்கள் அவற்றை மீளப்பெறமுடியாத நிலையேற்பட்டுள்ளது. அவ்வாறு மக்களால் மீளப்பெறமுடியாத உந்துருளிகளை படத்தில் காணலாம்.

### ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த உயர்தரத்தில் பொருளியல் பாடம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்குமான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மகரகம தேசிய கல்வி நிறுவகம் 5 ஆம் இலக்க விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் ஆசிரியர்கள் இச் செயலமர்வில் பங்கு கொள்வதை க.பொ.த உயர்தர பாடசாலை அதிபர்கள் உறுதிப்படுத்துமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

## விரிவுரையாளர்கள் கோரினால் தலையிடத் தயார் - காமினி

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தம்மிடம் வேண்டுகோள் விடுப்பார்களாயின் அவர்களது பிரச்சினைக்கான தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு தலையீடு செய்வதாக தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

எனினும் இதுவரை தம்மிடம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எந்தவொரு வேண்டுகோளையும் முன்வைக்கவில்லை.

இதேவேளை, தமது தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழிற்சங்க சம்மேளனம் அறிவித்துள்ளது.

விரும்பும் எந்தவொரு தரப்பினரும் தலையீடு செய்து தமது பிரச்சினைக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்க முடியும் என சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி ரஞ்சித் தேவசிறி கூறியுள்ளார். (அ-2)

## இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கக்கோரி ராமேஸ்வரத்தில் போராட்டம்

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரத்தில் சிறை பிடிக்கப்பட்டு உள்ள மீனவர்களை விடுவிக்கக்கோரி மீன்துறை அலுவலகம் முன்பு நேற்று காலை முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது.

கடந்த 21 ஆம் திகதி கச்சதீவு அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேரை 5 படகுகளுடன் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்தனர்.

சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள் தற்போது இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மீனவர்களை விடுவிக்கக்கோரி கடந்த 22 ஆம் திகதி முதல் இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

ஆனால், நேற்று வரை மீனவர்கள் விடுவிக்கப்படவில்லை. இந்நிலையில் நேற்றுக் காலை சிறைபிடிக்கப்பட்டு உள்ள 23 மீனவர்களின் உறவினர்கள் 100 இற்கும் மேற்பட்டோர் இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய மத்திய மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இராமேஸ்வரம் மேலரத வீதியில் உள்ள மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம் முன்பு முற்றுகை போராட்டம் நடத்தினர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டு உள்ள மீனவர்களிடம் மீன்துறை அதிகாரிகள் சமரச பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

எனினும் அவர்கள் மீனவர்களை விடுதலை செய்யும் வரை போராட்டம் நடத்துவோம் என்று கூறி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் கூறும்போது சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க மத்திய மாநில அரசுகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை கடற்படையினரின் அத்துமீறலை தடுத்து நிறுத்த வேண்டும். கடலில் மீன்பிடிக்க செல்லும் மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும். அதுவரை எங்களின் போராட்டம் தொடரும் என்று கூறினர். (அ-2)

## வீதியில் குற்றம்; நீதிமன்றில் சுத்தம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வீதியில் நின்று ரகளை செய்த இருவருக்கு யாழ்.நீதிமன்றம் ஒருவார காலத்திற்கு சிறுவர் நீதிமன்றில் சுத்திகரிப்பு தொழில் வழங்கியுள்ளது.

வட்டுக்கோட்டையை சேர்ந்த நபரொருவர் கே.கே.எஸ்.வீதியில் மதுபோதையில் ரகளை செய்து உள்ளார்.

உரும்பிராய் தெற்கை சேர்ந்த ஒருவர் அதேயிடத்தில் மதுபோதையில் வீதியால் பயணிப்போருக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளார்.

குறித்த இருவரும் கடந்த 25 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேசராசா குறித்த இருவரையும் 10 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுவித்ததோடு ஒருவார காலத்திற்கு யாழ்.சிறுவர் நீதிமன்றில் சுத்திகரிப்பு பணியில் [illegible] தீர்ப்பளித்துள்ளார். ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பீர்பாலின் அறிவுத் திறன்



ஒருநாள் ஒரு ஞானி அக்பரின் அரசவைக்கு வந்தார். பாதுஷாவே! நவரத்தினங்கள் எனும் அறிவாளிகள் தங்களது அரசவையில் உள்ளனர் எனக் கேள்விப்பட்டேன். இப்போது நான் அவர்களைச் சோதிக்க வேண்டும்.

அவர்களுள் ஒருவர் எனது கேள்விக்கு சரியான பதிலளித்தால், இம் முகலாயப் பேரரசை நான் வாழ்த்துவேன். தகுந்த பதிலளிக்கத் தவறினால் துன்பங்களை எதிர்கொள்ள தயாராயிருங்கள்! என சவால் விட்டார் ஞானி.

நாம் அந்த ஞானியின் சவாலை ஏற்கலாமா? அக்பரும் ஏனைய அவையினரும் சற்றுப் பயந்தவாறு யோசித்தனர்.

பீர்பால் தனது இருக்கையில் இருந்து எழுந்து பாதுஷாவே! நாம் இந்த ஞானியின் சவாலை ஏற்போம். நான் அவர் கேள்விக்கு பதிலளிக்கிறேன் என்றார்.

அந்த ஞானி பேசத்தொடங்கினார்.

ஒருமுறை 3 வழிப்போக்கர்கள் அந்தி சாயும் நேரத்தில் ஒரு தர்ம சத்திரத்தை அடைந்தனர். தங்களுக்கு தங்க ஆளுக்கு ஒரு அறை தேவை என்றனர். ஆனால், அவ் விடுதியின் காப்பாளரோ அவர்களிடம் 3 அறைகள் காலியாக இல்லையென்றும் ஆனால் ஒரே அறையில் 3 படுக்கைகள் காலியாக உள்ளன என்றார்.

அவ் வழிப்போக்கர்களும் ஒப்புக்கொண்டனர். அவ் விடுதிக் காப்பாளன், அங்கு தங்குவதற்கான வாடகை 30 வெண்கலக் காசுகள் என்றும் அவற்றை உடனே அளிக்குமாறும் கூறினான்.

சிறிது நேரம் கழித்து அவ்விடுதியில் கணக்கு வழக்குகளை பார்த்துக் கொள்பவர் விடுதிக் காப்பாளனிடம் வந்து, அவன் 5 காசுகள் அதிகம் வசூலித்துள்ளதாகவும் 25 வெண்கலக் காசுகளே வாடகை எனவும் கூறினான். விடுதிக் காப்பாளன் நேர்மையானவனாதலால் 5 காசுகளை அவர்களிடம் திரும்பக் கொடுக்குமாறு ஒரு வேலையாளிடம் சொன்னான்.

ஆனால், அந்த வேலையாள் நேர்மையற்றவன். அவன் 5 காசுகளை சரிசமமாகப் பிரிக்க முடியாது என எண்ணினான். அதனால் எப்படி 5 காசுகளை மூவரிடம் தருவது? பின்னர் அவன் ஒரு யோசனை செய்தான். தானே 2 காசுகளை எடுத்துக் கொண்டு மீதமுள்ள 3 காசுகளை ஆளுக்கு ஒன்று என திருப்பி அளித்தான்.

இங்கு தான் ஒரு பிரச்சினை. 30 காசுகள் மொத்தம் இருந்தன. 2-ஐ வேலையாள் எடுத்துக் கொண்டு 27 வாடகையாக வசூலிக்கப்பட்டது. இதனால் 30 காசுகளுள் 27 காசுகள் வாடகையாகவும் 2 காசுகள் வேலைக்காரனும் எடுத்துக் கொண்டான்.

அப்படியென்றால் 29 காசுகளே உள்ளன. (27+2=29). மீதமுள்ள ஒரு காசு எங்கே போயிற்று?... ஞானி கேட்டார்.

இது மிக எளிமையான பிரச்சினை என்றாலும் விடை காண சற்றுக் கடுமையாக இருந்தது. அக்பரின் அமைச்சர்கள் அனைவரும் கணக்குப் போட்டு பார்த்து தோற்றனர்.

கடைசியில் பீர்பாலிடம் அவர் விடை கண்டுபிடித்தாரா? எனக் கேட்டனர்.

ஞானியே! உங்களது கேள்வி எளிமையானதே. ஆனால் அதனைக் கடுமையானது போல் மாற்ற அனைவரையும் சற்றுக் குழப்பினீர்கள். உங்களது பிரச்சினையின் படி 3 வழிப்போக்கர்கள் 30 காசுகளை வாடகையாக அளித்து 3 காசுகளைத் திரும்ப பெற்றுக் கொண்டனர்.

அதனால் நாம் அவர்கள் 27 காசுகளை வாடகையாக கொடுத்தனர் என எண்ணினோம். 27 காசுகளுள் 25 காசுகளே வாடகையாக வசூலிக்கப்பட்டது. 2 காசுகளை வேலைக்காரன் எடுத்துக் கொண்டான். இப்போது கணக்கு சரியாக உள்ளது.

மக்களை ஏமாற்ற நீங்கள்



செய்த குழப்பமே! இது சரியா? என்றார் பீர்பால்.

சரி! உமது அறிவை மெச்சினேன் பீர்பால்! ஞானி புகழ்ந்தார். அவர் அக்பரிடம் திரும்பி, பாதுஷாவே! நீங்கள் அனைவராலும் நினைவில் வைக்கப்படுவீர்கள். மற்றும் பீர்பாலின் புகழ் எல்லா இடங்களிலும் ஓங்கும்! என வாழ்த்தினார்.

# பீர்பால் கதைகள்

## வாக்குறுதி

ஒருமுறை அக்பர் பீர்பாலுக்குப் பரிசளிப்பதாக வாக்களித்தார்.

ஆனால் அவர் நாட்டு நலனில் தனது கவனத்தைத் திருப்பியதால் அதனைப் பற்றி மறந்துவிட்டார்.

பீர்பால் அக்பரிடம் எவ்வாறு இதனை நினைவுக்கு கொண்டு வருவது என யோசித்தார்.

அவருக்கு அக்பரிடம் இது பற்றிப் பேச ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒருநாள் யமுனை நதியோரம் இருவரும் நடந்து சென்ற போது அக்பர் ஒரு ஒட்டகக்கூட்டம் அவ் வழியே கடந்து சென்றதைப் பார்த்தார்.

பீர்பால் ஒட்டகத்தின் கழுத்து ஏன் வளைந்துள்ளது எனக் கூற முடியுமா? என்று கேட்டார் அக்பர்.

பாதுஷாவே! நமது மதப் புத்தகங்களில் ஒட்டகத்தின்



கழுத்து ஏன் வளைந்துள்ளது என சொல்லப்பட்டுள்ளது. ஏனெனில் அது தான் சொன்ன வாக்கை காப்பாற்றாமல் மறந்துவிட்டதால் கடவுள் அவ்வாறு தண்டனை அளித்துள்ளார்! என பீர்பால் பதிலளித்தார்.

உடன் அக்பர் பீர்பாலுக்கு அளித்த வாக்குறுதியை நினைத்தார்.

இருவரும் அரண்மனை திரும்பியவுடன் அக்பர் பீர்பாலுக்கு வாக்களித்தவாறு விலையுயர்ந்த பரிசுகளை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அமரர் திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P.)

### வாரிவளவு, காரைநகர்



காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பேரம்பலம் மாணிக்கம் அவர்கள் 25.07.2012 புதன்கிழமை அன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் இ.ச.பேரம்பலம் (E.S.பேரம்பலம் கம்பனி, 50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், முன்னாள் நாத்தாண்டியா வர்த்தகரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- முத்துப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற சண்முகம்- பார்வதி தம்பதியினரின் மருமகளும், பராசக்தி, பரமேஸ்வரி, சௌந்தராம்பிகை, E.S.P. நாகரத்தினம், அன்னபாக்கியம், காலஞ்சென்ற பாலமணி, E.S.P.கணேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருஞானசம்பந்தன், சதாசிவம், சோமசுந்தரம், சண்முகராசா, தங்கமலர், சுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சண்முகநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சண்முகராஜன், சண்முகரத்தினி (அவுஸ்திரேலியா), ஞானேஸ்வரி (ஆசிரியை, முத்துத்தம்பி வித்தியாலயம், திருநெல்வேலி), சிவராசன் (கனடா), சிவரூபன் (லண்டன்), சிவகுமாரி (யாழ்ப்பாணம்), சிவகணேசன் (சிங்கப்பூர்), நந்தினி (கனடா), சாந்தகுமார் (அவுஸ்திரேலியா), சிவகுமார் (வவுனியா), கஜேந்திரன் (யாழ்ப்பாணம்), கஜமுகன் (கனடா), கமலநேசன் (அவுஸ்திரேலியா), கமலநாதன் (மொரட்டுவை பல்கலைக்கழகம்), கமலரூபன் (கொழும்பு பல்கலைக்கழகம்), ராஜசுலோஜினி (லண்டன்), கலைமகள் (கனடா), வாசுகி (யாழ்ப்பாணம்), அபிராமி (Holy Family Convent), செந்தூரன் (Colombo International School), வைஷிகா (Holy Family Convent) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அனுஷன், ஆரணி, வானதி, ஆரதி, சுவாதி, நிவேதன், கவிதன், ஆரங்கன், ஆர்த்தி, சாருஷன், கஜந்தன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் இல.11 பெதஸ்டா வீதி, கொழும்பு-05 இல் அமைந்துள்ள அவரது இல்லத்தில் 29.07.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இறுதிக் கிரியைகள் இடம்பெற்று 10 மணிக்கு கொழும்பு பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல. 11, பெதெஸ்டா வீதி, Off டிக்மன்ஸ் வீதி, கொழும்பு - 05**
**011 2503112, 077 1106323, 011 2542985, 077 8177817**

**தகவல் :**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

E.S.P. நாகரத்தினம் : E.S.P.Nagaratnam & Co, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
E.S.P.Nagaratnam & Co, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி
Kajamugan Hardware, 147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
S.P.N. Motors, 145, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
கஜமுகன் ஹாட்வெயர், (ஸ்டோரிஸ்), 103, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12

E.S.P. கணேசலிங்கம் : E.S.P.Trading Company Private Ltd, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
E.S.P. அன் கம்பனி, 41, அப்துல் ஜவாரி மாவத்தை, கொழும்பு - 12
E.S.P. அன் கம்பனி, 124, பழைய சோனகத் தெரு, கொழும்பு - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(C-635)

# அமைச்சர் றிசாத்திற்கு ஆதரவாக முஸ்லிம்கள் யாழில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

நீதியே! அகதியானோம்... அநாதை யாக்கி விடாதே! என்ற கோசத்துடன் யாழ். முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் முஸ்லிம் மீனவர்களின் உரிமைக்காகவும் முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றத்தை வலியுறுத்தியும் யாழ். முஸ்லிம் மக்கள் உரிமைப் போராட்டம் ஒன்றினை யாழ். பெரிய ஜும்மா பள்ளிவாசல் முன்றலில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் மேற்கொண்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு ஆதரவான கோசங்கள் அடங்கிய பதாகைகளினை ஏந்தியவாறும் ஆதரவான கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதில் நியாயம் கேட்கும் கௌரவ அமைச்சரை நீதிமன்றை அவமதித்ததாக் குற்றம் சுமத்தி சிறையிலடைக்க முயற்சிப்பது நியாயமா?, பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அரசாங்கத்துடன் தோளோடு தோள்நின்று அந்நிய மண்ணில் அகதிகளாகாது தன் மண்ணின் மானங்காத்த மக்களுக்கு கிடைக்கும் பரிசு இதுவா?, 20 வருடங்களுக்கு மேலாக துயரக்கடலில் தத்தளித்தவர்களை தங்களிற்குரித்தான கடலில் மீன்பிடிக்கத் தடையா?, மன்னாரில் மீண்டும் பாஷிசவாதம் துளிர்விடுகின்றது. 1990 இல் உயிர் இழந்தோம். உரிமை இழந்தோம் இன்று உறைவிட மன்னையும் இழப்பதா? நீதியே! முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்துக்கு தடை விதிக்காதே! நாங்களும் உங்கள் சகோதரர்களே என்ற வாசகங்கள் அடங்கிய பாதைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பமாகிய ஆர்ப்பாட்டம் 2 மணிவரை நீடித்துள்ளது. முதலில் பள்ளிவாசலின் முன்றலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் திடீரென வழியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் அப்பகுதியில் சுமார் 20 நிமிடங்கள் வரை வாகன நெரிசல் ஏற்பட்டதுடன் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் சிறிது நேரம் முறுகல் நிலையும் ஏற்பட்டது.

எனினும் முஸ்லிம் பெரியவர் களின் தலையீட்டால் ஒரு மணித்தியாலத்தில் ஆர்ப்பாட்டம் எவ்வித தீங்கும் இடம்பெறாது முடிபுக்கு கொண்டு வரப்பட்டது. (அ-4)

## எண்ணெய் நிறுவன ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் உள்ள லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவன ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் வழங்க வேண்டிய சம்பள நிலுவையை வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 500 கொள்கலன்களில் அடைக்கப்பட்டுள்ள எண்ணெய்யை பங்கிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ-2)

## இலக்கியக் கருத்தாடல்

(யாழ்ப்பாணம்)

அவை-41(FORUM)இன் ஏற்பாட்டில் **ஒப்பிலக்கியமும் உலகத்தரமும்** எனும் பொருளிலான இலக்கியக் கருத்தாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதியிலமைந்துள்ள கலை அகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் வருகையாளராக கலந்து கொள்ளவுள்ளார் என கலாநிதி த.கலாமணி அறிவித்துள்ளார். (அ-9)


UK Student / Family Visa

இன்று வெளிநாடு செல்வதில் பல தடைகள் இருந்தாலும்
எந்தவித சிரமமும் இன்றி அனைத்து ஏற்பாடுகளையும்
உடனடியாக செய்து கொள்ளக்கூடிய முறையில்
அனைத்துவித செலவுகளையும் VISA கிடைத்த பின்பு
செலுத்தக்கூடிய முறையில் இயங்கும் ஒரே ஒரு நிறுவனம்
எங்கள் நிறுவனம் ஆகும்.

STUDENT VISA

மாணவ, மாணவிகளே வெளிநாடு சென்று கல்வி கற்பதற்கு தகுதி இருந்தும் B1, B2 சான்றிதழ் இல்லையா? கவலையே வேண்டாம் கீழே உள்ள முகவரிக்கு தாய் அல்லது தகப்பனுடன் நேரில் வாருங்கள் முற்கொடுப்பனவோ பகுதி கொடுப்பனவோ ஏதும் இல்லை முற்றிலும் VISA கிடைத்த பின்பு

COLLEGE PAYMENTS, EMBASSY FEE, SPONSOR ARRANGEMENTS

லண்டனில் உள்ள (கணவனுடனோ அல்லது மனைவியுடனோ) ஒன்று சேர்வதற்கான VISA வைப் பெற்றுக் கொள்வதற்கு A 1 சான்றிதழ் அவசியம். அது உங்களிடம் இல்லையா? கவலையே வேண்டாம். கீழே உள்ள முகவரிக்கு நேரில் வாருங்கள்.

மாணவ விசாவில் செல்பவர்களுக்கு வாரத்திற்கு 10 மணித்தியால வேலை உத்தரவாதம்

15 வருடங்களுக்கு மேல் அனுபவம்
வாய்ந்த நிறுவனம் என்பதை மிகவும் பெருமையுடன்
அறியத்தருவதுடன்
மேலதிக விபரங்களுக்கு
HOTLINE-0214921831,0214921832
அனி இன்டர்நேஷனல் எடியுகேஷன்
கன்சல்டன் சர்விஸ்
இல.19,3 ஆவது மாடி (மக்கள் வங்கி கட்டடம்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அ/638)


## மரண அறிவித்தல்

### திருமதி பர்வதாம்பாள் கோவிந்தராஜா



வடக்கம்பராய் பூதராசி அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பர்வதாம்பாள் கோவிந்தராஜா அவர்கள் கடந்த 21.07.2012 சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதிக் குருக்கள் இராசம்மாள் ஆகியோரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சோமசுந்தரக் குருக்கள் பல்வளநாயகி அம்பாள் ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற இசை ஆசிரியர் (சங்கீத பூஷணம்) கோவிந்தராஜா ஐயர் அவர்களின் பாசமிகு மனைவியும் ஆவார்.

அன்னார் பிரகேஸ்வரி (அமரர்), திலகேஸ்வரி, விஜயசுந்தரம் (அமரர்), அன்னலெட்சுமி, மகாராசா (அச்சுவேலி தற்போது கனடா ஓய்வுபெற்ற ப.நோ.கூ.சங்க கொள்வனவாளர்), நவரத்தின நாகபூஜனாம்பாள் (அமரர்), நந்தகோபாலகுருக்கள் (பிரதமகுரு நெடியகாட்டுப் பிள்ளையார் கோவில்- வல்வெட்டித்துறை), திருமதி பராசக்தி கதிரமலை (அமரர்), பொன்னம்மா (ஓய்வுபெற்ற இசையாசிரியர் தற்போது- அவுஸ்திரேலியா), சத்தியமூர்த்தி (அமரர்) ஆகியோரின் மைத்துனியும், பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற இசையாசிரியர் தற்போது- தபாலதிபர் லண்டன்), பரமேஸ்வரன் (கனடா), ஸ்ரீஸ்கந்தராசா, உதயகுமாரி (லண்டன்), உதயகுமாரன் (கனடா), ஸ்ரீதரன் (அமரர்), கேதீஸ்வரி, வள்ளிகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்), அருந்தவநாயகி (கனடா), அறிவழகி (ஆசிரியர் நு/மங்கையர்க்கரசி வித்தியாலயம்),ஸ்ரீதரன் (லண்டன்), காமினி (கனடா), வதனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வரதா (கனடா), வனஜா (கனடா), லக்சலா (கனடா), ஸ்ரீகரன் (கனடா), ஸ்ரீசங்கமீரா, ஸ்ரீசங்கீதன், ஸ்ரீசங்கநேசன், சாயினி (கனடா), சைந்தவி (கனடா), சௌதாமினி, சோபனா, கணசியாம் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29/07/2012 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் இல.203, கோவில் வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

லயன் ஸ்ரீஸ்கந்தராஜா,
203, கோவில் வீதி,
நல்லூர்.
தொலைபேசி இல:-
021 222 6696.

தகவல்:-
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம் ஒரு மலர்; மொழி அதன் மொட்டு; செயல் அதன் கனி.

– பீச்சர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பொதுச் சட்டங்கள் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்

ஐயா! எனக்கு இந்தச் சட்டம் தெரியாது. இப்படி நீதிமன்றில் கூறி யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது என்பது பொது நியதி.

சட்டத்தை சகலரும் அறிந்திருக்க வேண்டும் என்பதே இதன் உள்ளார்ந்தம்.

எனினும் எங்கள் நாட்டில் பலருக்கு சட்டம் தெரிவதில்லை. சட்டத்தைத் தெரிந்து கொள்ள முற்படுவதும் இல்லை.

மாறாக பொதுச் சட்டங்கள் பற்றி பொது மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு பொது அமைப்புகளும் இல்லை.

ஆனால் வெளிநாடுகளில் அப்படியல்ல. பொதுச்சட்ட விதிமுறைகள் சகலருக்கும் தெரிவிக்கப்படும். சட்டங்கள் மட்டுமல்ல குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு முன்னதாக குழந்தை வளர்ப்புப் பற்றி சொல்லிக் கொடுக்கப்படும்.

திருமணம் செய்தவுடன் திருமண பந்தம் – கர்ப்ப காலப் பராமரிப்பு இவை எல்லாம் எடுத்தியம்பப்படும்.

இப்படியே வாழ்க்கைக்குத் தேவையான கல்வி அங்கு உடனுக்குடன் வழங்கப்படுகின்றது.

இதன் காரணமாக அந்த நாட்டு மக்கள் வாழ்க்கைக்காகக் கற்கிறார்கள். அதனால் அவர்களால் எந்தச் சவால்களையும் எதிர் கொள்ள முடிகின்றது. ஆனால் எங்கள் நாட்டில் அத்தகைய ஏற்பாடுகள் எதுவும் கிடையாது.

இப்போதெல்லாம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கி அவர்களை பிரதேச செயலகங்களில் குவித்து வைத்திருக்கிறார்கள்.

இதனால் மனித மூலதனம் பயன்பாடு இன்றி அல்லது உச்சப் பயன்பாடு இன்றி வீணடிக்கப்படுகின்றது.

பொதுச் சட்டங்களை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறக்கூடிய அரச அமைப்புகளை உருவாக்கி, அதற்குரிய பயிற்சிகளை பட்டதாரிகளுக்கு வழங்கி அவர்களை பொது மக்களிடம் அனுப்பும் போது,

பொதுச்சட்டங்களை மக்கள் அறிவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

இதன் மூலம் அரச பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் நடைமுறைகளும் பொதுச் சட்டங்களுக்கு மதிப்பளிக்கும் மனோநிலையும் உருவாகும்.

இல்லையேல் தனிமனிதர்களாக அல்லது குழுமங்களாக எதனையும் செய்யலாம் என்ற அறியாமை மேலாடும்.

இத்தகைய அறியாமைகள் இருக்கும் போது அத்தகைய மக்களை உயர்ந்த இடங்களில் இருக்கக் கூடியவர்கள் தங்கள் சுய நலனுக்காக பயன்படுத்திக் கொள்வர்.

இந்த மோசமான செயல்களால் அழிந்து போன அல்லது சட்டத்தின் பிடியில் அகப்பட்டுப் போய் தங்கள் வாழ்க்கையை தொலைத்தவர்கள் ஏராளம்.

எனவே எதுவும் செய்வோம் என்று நினைக்கின்ற அறியாமையை இல்லாமற் செய்வதற்கு பொதுச் சட்டங்கள் பொது நியமங்கள், பொது நியதிகளை மக்கள் அறிந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்தாக வேண்டும்.

# மகிந்தவின் செல்லப்பிராணி கூட்டிலிருந்து தப்பிச் சென்றது!

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செல்லப்பிராணியான கிளி கூட்டிலிருந்து வெளியேறி துறைமுகப்பிரதேசத்துக்கு பறந்து சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமேசன்காட்டில் வசிக்கும் மெகோ இனக்கிளியான இது நேற்று முன் தினம் துறைமுகப் பிரதேசத்துக்கு பறந்து வந்ததையடுத்து அதனைப் பிடிப்பதற்கு ஜனாதிபதியின் பாதுகாவலர்கள் மற்றும் கிளி பராமரிப்பாளர்கள் முயற்சி செய்த போதிலும் பிடிப்பதற்கு முடியாமல் போய்விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் மாலை வரையிலும் இந்த முயற்சி வெற்றியளிக்காத நிலையில் கிளி உயர்ந்த மரக்கிளையொன்றுக்குச் சென்று அமர்ந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளியைப்பார்த்ததும் குழப்பமடைந்த காகங்கள் கிளியைக் கொத்தத் தொடங்கவே காகங்களை விரட்டுவதற்கு பட்டாசு கொளுத்தப்படவே கிளி மேலும் குழப்பமடைந்து அது தற்போது துறைமுகப்பிரதேசத்தை விட்டுப் பறந்து சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கிளியைத்தேடும் படலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் துறைமுக கட்டடக்கூரையில் அமர்ந்திருந்த கிளியைப்பார்த்து துறைமுக ஊழியர்கள் சிலர் பெத்தோ பத் கேவத? (கிளி சோறு சாப்பிட்டாயா?) என்று கேட்கவே ரட கேவா ரட கேவா (நாட்டைச் சாப்பிட்டேன், நாட்டைச் சாப்பிட்டேன்) என்று கூறி கிளி பறந்து சென்றதாகவும் ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (அ-2)

## பண்ணிசை

(யாழ்ப்பாணம்)

சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம் நடத்திவரும் தெய்வீகப் பேருரையில் இன்று சனிக்கிழமை அகில இலங்கை திருமுறை மன்றத்தினரின் பண்ணிசை அரங்க நிகழ்வு நல்லூர் வடக்கு வீதியிலமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-9)

## மாலுசந்தி மை.வி.க விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கழகத்தலைவர் சி.செல்வதீபன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் பா.வியாகேசு, சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் ம.நவநீதமணி, கட்டைவேலி ப.நோ.கூ.ச. தலைவர் செ.செல்வராசா, மாலைசந்தை ஸ்ரீவரத ராஜா விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் எஸ்.சிறிசண்முகதேவ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரி.கங்கரா, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய அதிபர் பி.சந்திரபாபு ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்டமுன்னணி நட்சத்திர அணிகள் பங்குகொள்ளும் இவ்வுதைபந்தாட்ட விழாவில் கொற்றாவத்தை சிவானந்தா அணியை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் அணியும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணியும் மோதவுள்ளன. (அ-9)

## கோப்பாய் சரஸ்வதி வித்தி. நூற்றாண்டு மலர் வெளியீடு

யா/கோப்பாய் சரஸ்வதி வித்தியாசாலையின் நூற்றாண்டு மலர் வெளியீடும் கோப்பாய் இணையத்தள அறிமுகமும் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு வாழ்த்துரையினை கோப்பாய் ஸ்ரீ வீரபத்திரர் ஆலய பிரம்மஸ்ரீ சோ.இ.பிரணதார்த்தி ஹரக் குருக்கள் ஆற்றுவார்.

நூற்றாண்டு மலருக்கான வெளியீட்டுரையினை சிறப்பு விருந்தினர் எஸ்.சத்தியசீலன் ஆற்ற முதற்பிரதியை பண்டிதர் ச.சுப்பிரமணியம் பெற்றுக் கொள்வார்.

கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் இணையத்தளத்தை அறிமுகம் செய்துவைப்பார். (அ-9)

## போலி வி.ஐ.பிகளை கைதுசெய்ய விசேட விசாரணைக்குழு

அரசாங்க வி.ஐ.பி. களின் பெயரைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றும் நபர்களை கைது செய்வதற்கான விசேட விசாரணைக் குழுவொன்றை ஸ்தாபித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்களை பயன்படுத்தி மக்களை ஏமாற்றிய நபர்களில் குறைந்தபட்சம் 15 பேர் இவ்வருடம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்களில் பலர் துறைமுகம், விமான நிலையம் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சில் வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி மக்களை ஏமாற்றியுள்ளனர்.

அரச மரக்கூட்டுத்தாபனத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் தொழிலொன்றை பெறுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் போலி கடிதத் தலைப்பு, போலி இறப்பர் முத்திரை, போலி கையெழுத்துதிட்டு கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு கடிதம் எழுதிய 31 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித்துறை மாவட்ட கிளைச்சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யா/ வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ. வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறவிருப்பதால் உரியவர்கள் சமுகம் தருமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (அ-2)

## வேட்பாளருக்கு விளக்கமறியல்

(திருகோணமலை)

வடக்குக் கிழக்கு மக்களை சட்ட விரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கிழக்கு மாகாண சபையின் திருகோணமலை மாவட்டத்திற் கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் உட்பட மூவரையும் விளக்கமறி யலில் வைக்குமாறு திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

உப்புவெளி பிரதேசத்தில் வைத்து கடந்த புதன்கிழமை காலை மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் இவர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போதே திருகோணமலை மாவட்ட நீதவான் யூ.கே. ஏ.அன்வஹா மேற்படி சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### செயற்களம்



ஒருவன் தன்னை வெறுக்கத் தொடங்கிவிட்டால் அவன் கீழ்நிலைக்குச் செல்வதற்கான கதவுதிறந்து விட்டது எனறு பொருள். நம்மை நாம் வெறுக்காமல் இருப்பதுான் நமது முதற்கடமை.

நல்லனவோ தீயனவோ ஒரு செயலைச் செய்து விட்டால் மீண்டும் அதைப்பற்றி ஒருபோதும் நினைக்காதே. செய்தது செய்தாயிற்று. மூடநம்பிக்கையைத் தூர எறி. மணமே எதிர்வந்தாலும் பலவீனத்திற்கு இடம்கொடுக்காதே.

கழிந்ததை எண்ணிக் கலங்காதே. சென்றதைக்குறித்துச் சிந்திக்காதே. உன் நற்செயல்களையும் நினைவில் வைக்காதே. சுதந்திரமாக இரு.

உலகம் வேண்டுவது ஒழுக்கம். அன்பு தன்னலமற்ற அன்பு. இது யாரிடம் இருக்குமோ அவனையே உலகம் எதிர்பார்த்து நிற்கிறது.

பெரிய செயல்களைப் பெருந்தியாகத்தால் மட்டுமே செய்யமுடியும்.

எந்தச் செயலின் பலனும் நன்மை தீமைகளின் கலப்பாகவே இருக்கும். தீரம கலவாத நற்செயல் எதுவும் இல்லை.

தீயைப் புகை சூழ்ந்திருப்பது போல் செயலை எப்போதும் சிறிதாவது தீமை ஒட்டியே இருக்கிறது. எனவே அதிக நன்மையும் குறைந்த தீமையும் தரும் செயல்களை நாம் செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கரப்பந்தாட்ட அணிக்கு சீருடை வழங்கும் நிகழ்வு





(வேலணை)

மகாஜனாக் கல்லூரி மண்டபத்தில் வடமாகாண கரப்பந்தாட்ட பெண்கள் அணிக்கான சீருடை வழங்கும் வைபவம் கடந்த வியாழக்கிழமை 11 மணிக்கு நடைபெற்றது. இவ் வைபவத்திற்கு வட மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, மகாஜனாக் கல்லூரி அதிபர் வேல் சிவானந்தன், தெல்லிப்பழை பிரதேச் விளையாட்டு உத்தியோகத்தர் வல் லவக்குமரன், தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரி சபே ஷன், கரப்பந்தாட்ட பயிற்றுநர் தயாளபாலன், வடமாகாண விளையாட்டு அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை வடமாகாண கரப்பந்தாட்ட பெண்கள் அணிக்கான சீருடையை வழங்கி பின்பு உரையாற்றிய போது, இம்முறை தேசிய மட்டத்தில் வடமாகாண அணியை வெற்றி பெறச் செய்ய வேண்டும் எனவும் அதற்கான முயற்சிகளில் அவர்கள் ஈடுபட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டு கழகத்தின் 50 ஆவது ஆண்டு பொன்விழா

மகாத்மாஜி (தமிழாலயம்) மகாத்மாகாந்தி அறிவொளி ஐக்கிய சனசமூக நிலையங்கள் ஒன்றிணைந்த புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு பொன்விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறை கிளை உத்தியோகஸ்தர் செல்வன் செ.சற்சொரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கிழக்கு மாகாண கணக்காய்வு அத்தியட்சகர் பெ. தம்பிராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அதிபர் நா. சிவஞானம், கோப்பாய்த் தொகுதி அகில இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவரும் வலி.கிழக்கு சமாதான சபையின் தவிசாளருமான இ.மயில்வாகனம், புத்தூர் சட்டத்தரணி சிவநேசன், யாழ். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அதிபர் இராஜமகேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் நடைபெறவுள்ள உதைபந்தாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டு கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டு கழகம் மோதவுள்ளது. (3)

# கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம்

(வேலணை)

கரப்பந்தாட்டத் துறையை வளர்க்கும் முகமாக பெண்களுக்கான கரப்பந்தாட்ட பயிற்சி முகாம் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இப்பயிற்சி முகாமிற்கு கிரிடா சக்தியின் யாழ்.மாவட்ட நிகழ்ச்சி திட்டப் பணிப்பாளர் நந்தசேனா கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

அத்துடன் கரப்பந்தாட்ட பயிற்றுநர் தயாளபாலனும் இணைந்து பயிற்சிகளை வழங்கவுள்ளார். இப்பயிற்சி முகாமிற்கு பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா அவர்களும் தெல்லிப்பழை இளைஞர் சேவை அதிகாரி சபேஷனும் கலந்து கொள்ளவுள்ளனர். இப்பயிற்சி முகாமில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கான கரப்பந்தாட்ட உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

கரப்பந்தாட்டத் துறையை வளர்க்கும் முகமாக ஆண்களுக்கான கரப்பந்தாட்ட பயிற்சி முகாம் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இப்பயிற்சி முகாமிற்கு கிரிடா சக்தியின் யாழ். மாவட்ட நிகழ்ச்சி திட்டப்பணிப்பாளர் நந்தசேனா கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளார். அத்துடன் கரப்பந்தாட்ட பயிற்றுநர்களான தயாளபாலன் தர்மிகன் ஆகியோரும் இணைந்து பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

# விளையாட்டுச் செய்திகள்....

## வவுனியா இளவேனிலில் விளையாட்டுப்போட்டி

(பூந்தோட்டம்)

வவுனியா வைரவப்புளியங்குளம் இளவேனில் பாலர் பாடசாலை மற்றும் பகல் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வவுனியா தெற்கு கல்வி வலய நிர்வாகப்பிரிவு பிரதிக்கல்விப் பணிப்பாளர் செல்வி எம்.அன்னமலர் மற்றும் தாய் சேய் நல மருத்துவ அதிகாரி வைத்திய கலாநிதி ரி.ஜெயரதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. தர்மபாலன், கௌரவ விருந்தினராக வவுனியா பிரதேச செயலகத்தின் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜே. கெனடி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். விளையாட்டுப்போட்டியின் சில விளையாட்டு நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (266)

## மானிப்பாய் ஒக்ஸ்வேட் கிங்க்ஸ் சம்பியன்

(வேலணை)

சுதுமலை அம்பாள் விளையாட்டுக்கழகம் நடத்திய 8 பேர் 7 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் மானிப்பாய் ஒக்ஸ்வேட் கிங்க்ஸ் அணியை எதிர்த்து சுப்பர் கிங்க்ஸ் அணி மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் மோதியது.



நாணயசுழற்சியில் வென்ற சுப்பர் கிங்க்ஸ் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் ஒக்ஸ்வேட் கிங்க்ஸ் அணி 6.4 ஓவர்கள் நிறைவில் சகல இலக்குகளை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் மானிப்பாய் ஒக்ஸ்வேட் கிங்க்ஸ் அணி சார்பில் ராம் 11 ஓட்டங்களையும் பவீந்திரன் 09 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் சுப்பர் கிங்க்ஸ் சார்பில் ரஜீவன் 3 விக்கெட்டையும் நிரோஷன் 2 விக்கெட்டையும் கைப்பற்றினர். 55 என்ற வெற்றி இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய சுப்பர் கிங்க்ஸ் 7 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 48 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 6 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

இதில் சுப்பர் கிங்க்ஸ் சார்பாக றொட்ஸ் 25 ஓட்டங்களையும் கபில் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மானிப்பாய் ஒக்ஸ்வேட் கிங்க்ஸ் அணியின் புலேந்திரன் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார். இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக மானிப்பாய் ஒக்ஸ்வேட் கிங்க்ஸ் அணியின் ராமும் போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரராக சுப்பர் கிங்க்ஸ் அணியின் நிரோஷனும் தெரிவானார்கள்.





வடமாகாண விளையாட்டு திணைக்களத்தால் நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் அண்மையில் வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் முதலாம் இடத்தினை பெற்ற யாழ்ப்பாண மாவட்ட அணியினையும் இரண்டாம் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட அணியையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்தியா இன்று பலப் பரீட்சை






இலங்கை-இந்திய அணிகள் மோதும் மூன்றாவது சர்வதேச ஒருநாள் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பு ஆர்.பிரேமதாச சர்வதேச மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள இந்திய அணி 5 ஒருநாள் போட்டி மற்றும் ஒரேஒரு இருபது-20 போட்டியில் விளையாடுவதற்கு இலங்கை வந்துள்ளது.

ஏற்கெனவே நடைபெற்ற போட்டியில் இலங்கை, இந்திய அணிகள் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று தொடரில் 1:1 என்ற கணக்கில் சமனிலையில் உள்ளன.

# ஒலிம்பிக் ஜோதி ஏந்தினார் : அமிதாப்




உலகம் முழுவதும் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ள ஒலிம்பிக் போட்டிகள் நேற்று கோலாகலமாக தொடங்கியது.

இதனால் லண்டன் நகரம் முழுவதுமே விழாக் கோலம் பூண்டுள்ளது. உலகம் முழுவதிலுமிருந்து லட்சக்கணக்கான ரசிகர்கள் வருகை புரிந்துள்ளனர்.

இந் நிலையில் நேற்று லண்டன் சவுத் வார்க் நகரில் ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் நடைபெற்றது.

இதில் பாலிவூட் சுப்பர்ஸ்டார் அமிதாப்பச்சன் ஒலிம்பிக் ஜோதியை ஏந்தி ஓடிவந்தார். இது இந்தியாவுக்குக் கிடைத்த கௌரவமாக கருதப்படுகிறது.

# இருபது-20 உலகக்கிண்ண தொடருக்கு தயார் படுத்தல் முக்கியமானது-சங்கா

இலங்கையில் எதிர்வரும் செப்டம்பரில் ஆரம்பிக்கவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக இருபது-20 தொடரில் இலங்கை அணியை பொறுத்தவரை தயார் படுத்தல்கள் முக்கிய மானவை என இலங்கை அணியின் விக்கெட் காப்பாளரும், சிரேஷ்ட வீரருமான குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

தயார்ப் படுத்தல்கள் மிக முக்கியமானவையாக மாறவுள்ளன எனத் தெரிவித்த குமார் சங்கக்கார, தயார் படுத்தல்கள் சிறப்பாக அமைந்தால் அதிர்ஷ்டத்தை நம்பியிருக்காமல் தொடர்ச்சியாக திறமைகளை வெளிப்படுத்துவதன் மூலம் இத் தொடரை கைப்பற்றுவதற்கு முயற்சிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

இருபது-20 போட்டிகள் ஒன்று இரண்டு பந்துகளிலோ அல்லது ஒரு ஓவரிலோ மாற்றப்படக் கூடியது என்ற போதிலும், முழுமையான தயார் படுத்தல்கள் அணிக்கு உதவியாக அமையும் என அவர் தெரிவித்தார்.

இலங்கை அணி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சிறப்பாக செயற்படும் ஒரு காலக் கட்டத்தில் விளையாடுவது குறித்து அதிர்ஷ்டகரமாக உணர்வதாக தெரிவித்த குமார் சங்கக்கார இரண்டு உலகக்கிண்ண இறுதிப் போட்டிகளிலும், ஓர் உலக இருபது-20 தொடரின் இறுதிப் போட்டியிலும் பங்கு பற்றியமை அற்புதமானது எனத் தெரிவித்துள்ளார்.




சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக இருபது-20 போட்டிகள் இலங்கையில் இடம்பெறவுள்ள நிலையில் அது இலங்கைக்கு சார்பானதாக அமையும் என தெரிவித்த குமார் சங்கக்கார, பழக்கமான ஆடுகளங்களில், பழக்கமான சூழலில் ஆடுவது இலங்கை அணிக்கு அதிக புத்துணர்ச்சியைக் கொடுக்கும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டில் சிறப்பாக விளையாடுவோம் : சச்சின்




எதிர்காலத்தில் வெளிநாடுகளில் கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறும் போது மிகச் சிறப்பான முடிவுகளை பெற்றுத் தருவோம் என இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.


எதிர்காலத்தில் சிறப்பான பெறுபேறுகளை பெறுவதற்காக சிறந்த முறையில் தயார் படுத்தல்களில் ஈடுபடுவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற இங்கிலாந்து, அவுஸ்திரேலிய தொடர்களின் போது இந்திய அணி மோசமான தோல்விகளை சந்தித்திருந்த நிலையில் இந்திய அணி மீது விமர்சனங்கள் முன்வைக்கப்படும் நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகள் அண்மையில் இந்தியாவுக்கு வருகைதரவுள்ள நிலையில் இவ்விரு அணிகளுக்கு எதிராக இந்தியாவில் சிறப்பாக செயற்பட எதிர் பார்ப்பதாக தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், அத்தோடு எதிர்காலங்களில் அந்நாடுகளுக்குச் செல்லும் போதும் சிறப்பான முறையில் செயற்பட எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்திய அணி உள்நாட்டில் மாத்திரம் சிறப்பாக செயற்படுகிறது என்ற குற்றச்சாட்டை முன்வைக்க முடியாது எனத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்திய அணி அவுஸ்திரேலியாவில் விளையாடியபோது அவுஸ்திரேலிய அணி தங்களது உள்நாட்டிலேயே போட்டிகளில் பங்கு பற்றியதாகவும், இங்கிலாந்து அணியும் அவ்வாறே சொந்த நாட்டிலேயே தங்களை வென்றிருந்த நிலையிலேயே இந்திய அணி மீது விமர்சனங்கள் அதிகமாக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய அணி எங்கு செல்லுகின்ற போதிலும் சிறப்பாக செயற்படவும், வெற்றிகளை பெற்றுக்கொள்ளவுமே செல்வதாக தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், சில சமயங்களில் அது முடியாமல் போவதாக தெரிவித்தார்.





பிசப் சவுந்தரம் மீடியா சென்றர் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப்பெற்று ஆரம்பிக்கின்ற ஊடகப் பட்டப்படிப்பில் தொடக்க நிகழ்வு நேற்று நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பொன்.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனை பிரதிநிதிகள் தேவை

எமது நிறுவனத்திற்கு விற்பனை பிரதி நிதிகள் தேவை ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் எதிர் பார்க்கப்படுகின்றது.

| தகைமை | கணனி அறிவுள்ளவர்கள் |
|---|---|

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : Elate Computer Systems 676, K.K.S. Road, Jaffna. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 03.08.2012 (102)


# ஆணைக்குழு அமுலாக்கத்...

தெரிவித்துள்ளார்.

அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் பகிரங்க மனுவில் கையெழுத்திடும் இயக்கம், மனிதவுரிமை செயற்பாட்டாளர் அமைப்பினால் கொழும்பு புறக் கோட்டை ரயில் நிலையத்திற்கு எதிரில் ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு மனுவில் கையெழுத்திட்டபின் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

நல்லிணக்க ஆணைக்குழு கணிசமான சிபாரிசுகளை செய்துள்ளது. அவற்றில் மனிதவுரிமைகள் என்ற தலைப்பில் மிகமுக்கியமானது தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் பிரச்சினையாகும்.

இது இன்று கைதிகளை அடித்துக்கொலை செய்யும் பிரச்சினையாகவும், கைதிகளை படுகாயப்படுத்தும் பிரச்சினையாகவும் மாறியுள்ளது. அதனால்தான் இதை நாம் இன்று எரியும் பிரச்சினை என அழைக்கிறோம். இதை உடனடியாக தீர்த்து வையுங்கள்.

சிலப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு தேவையென்று சொல்கிறீர்கள். இன்னும் சில பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேசியப்பிரச்சினையின் அரசியல் தீர்வுதேவையென செல்லுகிறீர்கள் என அந் நிகழ்வில் மனோ கணேசன் தெரிவித்தார். (எ-11)


## தேவை

நல்லூர் உற்சவ கால புத்தகக் கடை ஒன்றினை நேர்மையுடன் நடத்த ஒருவர் தேவை. (ஆண்/பெண்)

**0718474325** (103)

அனேக பெற்றோர்களின் வேண்டுகோளிற்கிணங்க.......

2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும் வருடாவருடம் 3000திற்கும் அதிகமான மாணவர்களைச் சந்திக்கும் நாடெங்கிலுமுள்ள வெற்றித்தேர்வு வளவாளர்கள் கலந்துகொள்ளும்

## மாபெரும் கருத்தரங்கும் செயலமர்வும்

இம்முறை இரு இடங்களில்

**யாழ்ப்பாணம், தென்மராட்சி, தீவகம் கல்வி வலய மாணவர்களுக்காக யாழ் நகரில்.....**

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம் : 01.08.2012 புதன் மு.ப. 9.00 – பி.ப. 2.30 வரை

**வடமராட்சி கல்விவலய மாணவர்களுக்காக வடமராட்சியில்....**

இடம்: வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை மண்டபம், மாலு சந்தி.
காலம் : 05.08.2012 ஞாயிறு மு.ப. 9.00 – பி.ப. 2.30 வரை

முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களைக்கொண்ட மாதிரி வினாப்பத்திரம் பரீட்சையாக நடாத்தப்பட்டு மதிப்பீடு செய்து Multi Media Projector மூலம் விரிவான விளக்கங்களுடன் தெளிவுபடுத்தப்படல். பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படும்.

அனுமதிக்கட்டணம் ரூபா 150.00 மட்டுமே!

நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.

பங்குபற்றிச் சித்தியடையுங்கள்!

தொடர்புகளுக்கு:
(சி-638) 0775388471, 0773126807, 0779543956

## 9 Course fee Free

(எதாவது ஒரு கற்கைநெறியை கற்பவர்களுக்கு)

Multimedia, Hardware, Networking
Ms office, Web Design, DTP
English, Singalam, Accounting

Duration 2 Month only

மேலதிக விபரங்களுக்கு நேரில்,
பூரண அறிவிற்கான உத்தரவாதம். 243, Adiyapatham Road, Kalviyankadu

## தேவை

PageMaker, Coreldraw, Photo shop செய்வதில் நல்ல அனுபவம், திறமை உள்ளவர் தேவை.

திறமைக்கேற்ப கவடிய சம்பளம் வழங்கப்படும்.

**0772174751** (104)

## கற்க கசடற கற்பவை கற்று கௌரவமாய் வெளிநாடு போக!

3 தெரிவுகள்

**UK, Australia, Canada, America**

உள்ளிட்ட 29 நாடுகளின் 300க்கும் மேற்பட்ட பல்கலைகழகங்களின் வலைப்பின்னலான

LAUREATE INTERNATIONAL UNIVERSITIES & INTI INTERNATIONAL UNIVERSITY LAUREATE INTERNATIONAL UNIVERSITIES

15க்கும் மேற்பட்ட முன்னணி மலேசியப் பல்கலைக்கழங்கள்

Malaysia UNIVERSITY APPLICATION CENTRE

The University of Nottingham, INTI, MONASH University, Curtin, SUNWAY UNIVERSITY, UCSI, MAHSA, KLIUC, TARC College

**மாதம் 50,000/- வருமானத்துடன்**

ஹோட்டல் பயிற்சிநெறி & தொழில்வாய்ப்பு வழங்கும் மலேசிய அரசாங்கத்தின் SkillsMalaysia INVITE

ஆகியவற்றின் உத்தியோகபூர்வ வடக்கு மாகாண ஏக பிரதிநிதி

## சிகரம்

கல்வி - தொழில் வழிகாட்டி

**UK, Australia, Canada, America**

பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பான

விளக்கக் கருத்தரங்கு & SPOT ADMISSION

ஏற்கனவே அனுமதி பெற்று ஓகஸ்டில் செல்லவுள்ள மாணவர்களுடன்.



INTI Laureate International Universities பிரதிநிதி Mosesஐச் சந்தித்து அனுமதி பெறுங்கள்

29 ஞாயிறு 10 மணி ஜானம்ஸ் ஹொட்டேல் யாழ்ப்பாணம்

முற்பதிவு அவசியம் 021 300 80 60 0773 616 798

UNIVERSITY OF BRADFORD, THE UNIVERSITY OF WOLLONGONG AUSTRALIA, BlueMountains, UH

EDUCATION

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 8060 நேரடி: 0773 616 798
Mail: edusikaram@gmail.com Web: www.sikaram.lk

# புனித பத்திரிசியார் கல்லூரி

# பழைய மாணவர்களுக்கான அறைகூவல்

FIDE ET LABORE ST. PATRICK'S COLLEGE



**பழைய மாணவர்களின் சர்வதேச ரீதியிலான ஒன்றுகூடல் யாழ்ப்பாணத்தில்**

ஆரம்பநிகழ்வாக அறிமுக வைபவம்

**பத்திரிசியார் குடும்பத்தின் நடைபவனி**

உலகளாவிய பழைய மாணவர்கள் யாழ் நூல் நிலைய வளாகத்தில் உள்ள புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னைநாள் அதிபர்

**அருட்தந்தை ரி.எம்.எவ். லோங் (அ.ம.தி) அடிகளாரின்**

உருவச்சிலை முன்றலில் ஒன்றுகூடி நிகழ்வு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டு அங்கிருந்து அலங்கார ஊர்திகள் சகிதம் நடைபவனியாக பிரதான வீதி ஊடாக புனித பத்திரிசியார் கல்லூரியைச் சென்றடைவர். மூன்றுநாட்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வின் முதல்நாள் வைபவமும் இராப்போசன விருந்தும் கல்லூரி வளாகத்தில் இடம்பெறும்.

பங்குபற்றுபவர்களுக்கான பதிவுகள் :
பற்றீசியன் நிறுவனத்தில் சனி, ஞாயிறு தினங்களில்
காலை 8.30 – மாலை 5.00 மணி வரை மேற்கொள்ள முடியும்.
61, புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 222 6148 திரு.ஜெயக்குமார், 0776183102 திரு.தயாளன்.

விசேட T.சேட்டும், நினைவுச் சின்னங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

## CALLING ALL THE OLD BOYS OF ST.PATRICK'S COLLEGE TO RALLY ROUND



## PATRICIANS GLOBAL REUNION IN JAFFNA

**Inauguration of "The Reunion" with a Unique Event**
**"THE PATRICIAN WALK"**

**Saturday 04th August, 2012, 3.00 pm Old Boys of St. Patrick's College from across the world will assemble in front of the Statue of our former Rector Rev. Fr.T.M.F Long (O.M.I) in the Jaffna Public Library Premises at 3.00 pm The walk will commence following the ceremonial inauguration of the "Global Reunion" and proceed along Main Street to the College Premises where the First Days Reunion Activities and Dinner will take place**

Registration of Participants:
Patrician Institutes, No. 61, St. Patrick's Road, Jaffna
On Saturday 29th & Sunday 30th July, 8.30 to 5.00 pm
Mr. Jeyakkumar - TP: 021 222 6148
Mr.Thayalan -TP: 0776183102

SPECIAL "T" SHIRTS AND SUVENIRS ARE AVAILABLE

(098)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org